பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 30 புதன்கிழமை 15.03.2023 கதிர் 126

## தேர்தல் ஊடாக மக்களின் இறைமையை மதியுங்கள்

### ஜனாதிபதி ரணிலுக்கு மாகாநாயக்க தேரர்கள் அவசர கடிதம்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஊடாக மக்களின் இறைமை மதிக்கப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின்மகாநாயக்கதேரர்கள் அவசர கடிதமொன்றை வழங்கியுள்ளனர்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வறக்காகொடஸ்ரீஞானரத்தன தேரர்ஆகியோரின்கையொப்பத்துடன், ஜனாதிபதிக்கு இந்தக்கடிதம்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவையும் மக்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களையும்குறைத்து, சமூகத்தில் நிலவும் அமைதியின்மையைச சீர்செய் யக் கொள்கை ரீதியான உரிய பொறிமுறையை ☞2

## பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் இன்று ஓடும் அலுவலக ரயில்கள்!

நாடளாவிய ரீதியில் அத்தியாவசிய ரயில் சேவைகளை முறையாக முன்னெடுப்பதற்கும் மக்களின்இயல்புவாழ்க்கையைப் பேணுவதற்கும் தேவையான அனைத்துநடவடிக்கைகளையும் ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி இன்று காலை அவிசாவளையில் இருந்து கொழும்பு நோக்கி காலை 5.00 மற்றும் 5.45 மணிக்கும், சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கி அதிகாலை 4.50 மற்றும் 5.50 மணிக்கு இரண்டு ரயில் சேவைகளும் இயக்கப்படுகின்றன.

ரம்புக்கனையில் இருந்து காலை 5.25 மற்றும் 5.57 மணிக்கும், கனேவத்தையில் இருந்து அதிகாலை 3.55 மணிக்கும், மஹவயில் இருந்து 4.45 மணிக்கும், கண்டியில் இருந்து 5.00 மணிக்கும் கொழும்புக்கு இரண்டு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

கரையோரப் பிரதேசத்தில் பெலியத்தவிலிருந்து அதிகாலை 4.15 மணிக்கும், காலியிலிருந்து 5.00 மணிக்கும், அளுத்கமவில் இருந்து 6.00 மணிக்கும், தெற்கு களுத்துறையிலிருந்து கொழும்புக்கு காலை 7.00 மணிக்கும் ரயில்கள் சேவைகள் இயக்கப்படுகின்றன.

ரயில்வேதிணைக்களஅதிகாரிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்து, நாட்டின் பொதுஒழுங்கைப்பேணுவதற்கும், இடையூறுகளைத் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளைப் பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி, பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகள், தங்க ளின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு ரயில் நிலையத்தையும் உள்ளடக்கும் வகையில் போதிய பாதுகாப்பை வழங்குவதுடன், ☞2

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா நடக்காதா என்கிற சந்தேகம் யாருக்கு இருக்கிறதோ இல்லையோ வடக்கில் எல்லா வேட்பாளர்களும்தெளிவாக இருக்கிறார்கள் தேர்தல் நடக்காது என்பதில். ஏனென்றால் ஒருவர்கூட தேர்தலுக்கான பரப்புரைகளைச் செய்வதாக இல்லை.

ஆளையாள் கடித்துக் குதறிக்கொண்டும்பழைய வண்டவாளங்களையெல்லாம் அவிழ்த்துவிட்டுக் கொண்டும் பரபரப்பாகத் தொடங்கிய பரப்புரைகள் இப்போது மெல்ல அடங்கிவிட்டன.

இனி மீண்டும் வாக்குத் தேவையென்றால் மட்டும்தான் ஒற்றுமை, இனமானம், அரசியல் தீர்வு, 13ஆவது திருத்தம் எல்லாம் சந்திக்குவரும். என்றைக்குவாக்குத்தேவை என்ற நிலை வருகிறதோ அப்போதுதான் தமிழ்க் கட்சிகளுக்கு இந்த ஒற்றுமை, தீர்வு எல்லாம் ஞாபகத்துக்கு வரும்.

வாக்குகள், தேர்தல் இல்லாத வரைக்கும் அதுபற்றியெல்லாம் யாரும் அலட்டிக்கொள்ள மாட்டார்கள். அல்லது அவையெல்லாம் அவர்களுக்குத் தேவையற்ற விடயங்கள். ஆனால், மக்களுக்காகத்தான் தாங்கள் ஒற்றுமை பற்றிப் பேசுவதாக மேடை கிழியப் பேசுவார்கள். உண்மையில் ஒற்றுமை பற்றிய அக்கறை இருந்தால், இப்போது மக்களிடம் போய் அதைப் பற்றிப் பேசலாமே! அதைச் செய்யமாட்டார்கள், ஏனென்றால் பிறகு ☞2

## மிதக்கும் சூரிய மின்கல திட்டத்திற்கு அனுமதி

### பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும்

மிதக்கும் சூரிய மின்கலத் திட்டத்திற்கான பரீட்சார்த்த முயற்சிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தென்கொரியாவும் இலங்கையும் இணைந்து இந்தப் பரிசோதனைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

நதிகள்,ஏரிகள்,கடல்களில் மிதக்கும் சூரிய மின்கலத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுவருகின்றது. அதன்முதல் கட்டமாககிரிப்பான்நதிமற்றும் சந்திரிகா நதி ஆகிவற்றில் மிதக்கும் சூரிய மின்கலத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.

இந்தத் திட்டத்திற் கான 6.83 மில்லியன் கொரியன் வொன் பணத்தை தென் கொரிய அரசு மானியமாக வழங்கும். பரீட்சார்த்த திட்டத்தில் ஒரு மெகா வோட் மின் உற்பத்திக்கான தளம் ஏற்படுத்தப்படவுள்ளது.

# திட்டமிட்டபடியே இன்று முழு பணிப்புறக்கணிப்பு

### வர்த்தமானி பிரகடனங்களால் எம்மைத் தடுக்க முடியாது
### தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 15**

**ஆட்சியாளர்களின் வர்த்தமானி அறிவித்தல்கள் ஊடாக எமது பணிப்புறக்கணிப்பைத் தடுத்து நிறுத்திவிடமுடியாது. திட்டமிட்ட வகையில் இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படும் என்று 47 தொழிற்சங்கங்களின் கூட்டான, தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.**

**தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பில் உள்ள அரச, அரச அனுசரணை பெற்ற பல்வேறு தொழிற்சங்கங்கள் இந்த பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.**

**முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ள வரி திருத்தப்பட வேண்டும் என்பதே இந்தப் போராட்டத்தின் முக்கிய கோரிக்கை. ஒரு இலட்சம் ரூபாவிற்கும் அதிக வருமானம் பெறும் அனைவரிடமிருந்தும் 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரியை அறவிடுவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளமையினால், தொழிற்சங்கத்தனர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என்று குற்றச்சாட்டப்படுகின்றது.** ☞2

## மத்திய வங்கி அலுவலர்கள் கறுப்பு ஆடைகளுடன் பேரணி

### கொழும்பில் நேற்றுப் போராட்டம்

இலங்கை மத்திய வங்கியின்தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்ககூட்டமைப்பினர் செவ்வாய்க்ககிழமை நண்பகல் கறுப்பு ஆடைகளுடன் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை மத்திய வங்கியில் இருந்து தொடங்கிய பேரணியில் நூற்றுக் கணக்கான வங்கி ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர். அனைவரும்கறுப்பு ஆடைகள் அணிந்தவாறு பதாகைகளை தாங்கியவாறு, நியாயமற்ற வரி அறவீட்டை அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று வலியுத்தினார்கள்.

ஆர்ப்பாட்டப் பேரணி மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டம் ஊடாக சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள பாதையை நோக்கி நகர முயன்ற ☞2

## ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத் தின் கடன் வசதியை பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாரிஸ் கழகம், ஜப்பான், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ☞2

## பணத்தை மோசடி செய்துவிட்டு தமிழ்நாட்டுக்குத் தப்பியவர் மீது இராமேஸ்வரத்தில் முறைப்பாடு

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்.15

இலங்கையில் பலரிடம் வெளிநாடு அனுப்புவதாக தெரிவித்து பணத்தைப் பெற்றுக்கொண்டு இந்தியாவிற்கு படகில் தப்பிச் சென்று தலைமறைவாகி இருப்பவருக்கு எதிராக தமிழ்நாட்டில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மூதூரைச் சேர்ந்த 20 பேரிடம் வெளிநாடு அனுப்புவதாக கூறி தலா 6 லட்சம் ரூபாய் வீதம் பெற்றுக்கொண்ட ஒருவர் தன்னை ஓர் அகதி என்று காட்டிக்கொண்டு இந்தியாவிற்குத் தப்பிச் சென்று பதுங்கிவிட்டார்.

ஏமாற்றப்பட்ட ஒருவர் விமானம் மூலம் இந்தியா சென்று இராமேஸ்வரம் மாவட்ட ஆட்சியரிடம், பணத்தை மோசடி செய்து கொண்டு இந்தியாவிற்குத் தப்பி வந்த நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேணடும் என்று மனு வழங்கியுள்ளார்.

அவரதுமனுவைமுறைப்படி விசாரித்து உரிய பதில் அளிப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொக்கிளாயில் மீனவர் மீது சித்திரவதை



(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்.15

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குளாய் கருநாட்டக்கேணியில்கடற்கரையில் கரைவலைத் தொழிலில் ஈடுபடும் நீர்கொழும்பைச் சேர்ந்தசம்மாட்டியால் மட்டக்களப்பைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கட்டி ☞2

## போரைவிடப் பயங்கரம் நிறைந்தது வீதி விபத்து

### தரைப்படை ஜெனரல் தெரிவிப்பு

(அபு அலா)

போரைவிடப் பயங்கரமானவையாக இருக்கின்றன வீதி விபத்துக்கள். 13 வருடங்களுக்குள் இலங்கையில் 68 ஆயிரம் பேர் வீதி விபத்தினால் இறந்துள்ளனர. ஆண்டுஒன்றுக்குசராசரியாக 3 லட்சம் பேர் வீதி விபத்தால் பாதிக்கப்படுகின்றனர். அதாவது ஒரு நாளைக்கு சராசரியாக 10 பேர் இந்த வீதி விபத்தினால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் இறக்கினர்.

இவ்வாறு தெரிவித்தார் தரைப்படையின் 24ஆம் பிரிவின் கட்டளைத் தளபதி, மேஜர் ஜெனரல் விபுல சந்த்ர சிரி தெரிவித்தார்.

இலங்கை ☞2

### இந்திய மீனவருக்கு அனுமதி வழங்குவதை எதிர்த்து

## மார்ச் 23 மன்னாரில் மீனவர் ஆர்ப்பாட்டம்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், மார்.15

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டலைத் தடுத்து நிறுத்துவதுடன் அவர்களுக்கு இலங்கைக் கடல்எல்லையில் மீன்பிடிக்க அனுமதி வழங்கக்கூடாது என்று வலியுறுத்தியும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியும் மார்ச் 23ஆம் திகதி மன்னாரில் முதலாவது ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண மீனவ அமைப்புக்கள் இரு தடவை யாழில்ஒன்றுகலந்துரையாடியதன் அடிப்படையில் இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் அனுமதி வழங்குவதை எதிர்த்தும் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளை தடுக்கும் சட்டங்களை நடைமுறைப் படுத்த வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டங்களைமேற்கொள்வது எனத் தீர்மானித்தனர்.

இதன்அடிப்படையிலான முதலாவது கவனவீஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மன்னாரில் நடத்துவது என்று திங்கட்கிழமை கூடியய மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கம் முடிவு செய்துள்ளது. செலாளர் ஆலம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

காலை 9 மணிக்கு மன்னார் ஸ்ரேடியம் முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணியைத் தொடங்கி மன்னார் மாவட்டச் செயலகம் வரை செல்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ☞2

## தேசிய மக்கள் சக்தி நேற்று கல்முனையில் ஆர்ப்பாட்டம்




(அகீல்)

தேசிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டம்ஒன்றுகல்முனை மாநகரில் திங்கள்கிழமை பிற்பகல் இடம் பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி கிளையினால்ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம், தேசிய மக்கள் சக்தியின் அம்பாறைமாவட்டசெயற்குழு உறுப்பினரும், கல்முனைத் தொகுதி அமைப்பாளருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள ஊழல், நிதி மோசடி உட்பட நாட்டில்மின்கட்டண உயர்வு, வரிச்சுமை உள்ளுராட்சி மன்றத் தேர்தலை நடத்தவிடாது ஏற்படுத்தப்பட்டு வரும் உயர்மட்டதடைகள், விலைவாசி உயர்வு என்பவற்றைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கல்முனைபஸ்நிலையத்திற்கு அருகிலும், மாநகர மேயர் அலுவலகம் மற்றும் பொது நூலக வளாக முன்றலிலும் சுமார் ஒரு மணி நேரம் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

திருடர்கள், திருடர்கள் - 23 வருடதிருடர்கள் முதல்வர், பிரதி முதல்வர் பதவி விலக வேண்டும் கணக்காளர் பதவி விலக வேண்டும் கொள்ளையடித்தபணத்தை திருப்பிக்கொடு மக்களே திருடர்களை விரட்டுங்கள் வாழ்க்கைச் செலவுவான் ☞2

## போராட்டத்தில் ஈடுபடாத தொழிற்சங்கள்

தனியார் பஸ் உரிமையாளர்கள்சங்கம், தொடருந்து நிலைய அதிபர் சங்கம், தொடருந்துக்கட்டுப்பாட்டாளர் சங்கம்மற்றும்தொடருந்துக் கடவை காவலாளர்கள் சங்கம் ஆகியன இந்தப் பணிப்புறக்கணிப்புப்போராட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளன.

நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ள இன்றைய பணிப்புறக்கணிப்பு தொழிற்சங்க நடவடிக்கையில் இணைந்துக் ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேர்தல் மேடையில் போய் பின்னர் எதைப் பேசுவது, இந்தப் பொய்யையும் விட்டால் வேறெதைச் சொல்லி வாக்குளைகத் திருட முடியும்?

என்னவொரு அரசியல் வில்லத்தனம் ஐயா!

*******

தமிழ் அரசுக் கட்சி கட்சி தாவிய உறுப்பினர்களுக்கு விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பிய தொடர்பாக நேற்று நான் எழுதியிருந்த விடயம் தொடர்பில் யாழ். மாநகர சபை உறுப்பினர் ஒருவர் அழைப்பெடுத்தார். கட்சிதனது உறுப்பினர்களுக்கு மட்டுமே நடவடிக்கை எடுத்திருக்கிறது. கூட்டாளிக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்டவர்களிடம் விளக்கம் கேட்டுக் கடிதங்கள் அனுப்பப்படவில்லை என்றார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட கட்சியின் பதிவு செய்யப்பட்ட ஊறுப்பினர்கள் 18 பேர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணி உறுப்பினராக இருந்தவர் தர்சானந்த், அவர் பின்னர் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு புளொட் சார்பில் போட்டியிட்டார். அவருக்குக் கூட விளக்கம் கேட்டக் கடிதம் அனுப்பப்படவில்லை. ஏனென்றால் இளைஞர் அணி உறுப்பினர் என்று அப்போது அவர் திரிந்திருந்தாலும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் படிவம் நிரப்பி சந்தா செலுத்திய உறுப்பினரா அவர் என்பதைத் தேடிப்பார்த்து உறுதிப்படுத்திய பின்னர்தான் அவரிடம் விளக்கம் கேட்க முடியும் என்பதால் அதனைச் செய்யவில்லை, கட்சியின் உறுப்புரிமைப் படிவம் நிரப்பி சந்தா செலுத்தியவர்கள் கட்சி தாவியிருந்தால் அவர்களுக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

அப்படியென்றால் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எல்லோரிடமும் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமைப் படிவத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டுதான் போட்டியிட அனுமதிக்கிறார்கள் என்று ஒரு கதை திரிந்ததே அதில் உண்மையில்லையா என்று கேட்டேன். அப்படி ஒருவரிடமும் வாங்குவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக சிறிதரன் முதல் தடவை தெரிவு செய்யப்பட்டபோது, அவர் ஈபிஆர்எவ்எவ் கட்சியின் பரிந்துரையாக வந்தவர், அவரிடம் தமிழ் அரசுக் கட்சி உறுப்புரிமைப் படிவத்தில் கையெழுத்து வாங்கப்பட்டது என்று ஒரு குற்றச்சாட்டுச் சொல்லப்பட்டு வந்தது. ஆனால், ஈபிஆர்எல்எவ் சிறிதரனைப் பரிந்துரைப்பதற்கு முன்பே அவர் தமிழ் அரசுக் கட்சியில் படிவம் நிரப்பி உறுப்பினராகிவிட்டார். அதன் பின்னர் சுரேஸ்பிரேமச்சந்திரன் வந்து கேட்டதால் அவருக்கும் ஓம் ஓம் சொல்லிவிட்டாரே தவிர, அவர் முன்னரே தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்தான் என்றார்.

இதை எப்படி நம்ப முடியும் என்று நான் கேட்டதற்கு. சொலமன் சூ சிறிலும் நானும் தான் அவரிடம் கையெழுத்து வாங்கி படிவம் நிரப்பியவர்கள் பிறகென்ன உங்களுக்குச் சாட்சி வேண்டும் என்றார்.

அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது வாசகர்களே, அவர் சொன்னதை உங்களிடம் கூறியிருக்கின்றேன். ஆனால், ஒரே ஒரு சந்தேகம் மட்டும் என் மனதில், அண்மைக்காலமாக யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் சொலமன் சிறிலை முதல்வராக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தான் பரிந்துரைத்திருக்கிறார். இரண்டு மூன்று தடவைகள் அவர் இந்தப் பரிந்துரையைச் செய்திருக்கிறார். ஒரு நன்றிக்கடனுக்காகத்தான் அப்படிச் செய்திருப்பாரோ...! எல்லாம் அறிந்தவன் அந்த நாயகம்தான்.

- இடிமின்னல் -

## தேர்தல் ஊடாக ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தயாரிக்கவேண்டும்.

அதிகரித்துள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாக எதிர்கொண்டு, அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவை குறைத்து மக்கள் வாழ்க்கையை பாதுகாப்பதற்கு மக்கள் நேய கொள்கையினை நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தத் தீர்மானமிக்க தருணத்தில் நாட்டை பொருளாதார ரீதியில் உறுதிப்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் தங்களின் கடமைகளை பொறுப்புணர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்பதை வலுவாக நம்புகின்றோம்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதென்பது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஊடாக மக்களின் இறைமையை உறுதிப்படுத்துவதாகும் என வலியுறுத்தியுள்ள மகாநாயக்கத் தேர்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை உரிய முறையில் நடத்துவது ஆட்சியாளர்களின் பொறுப்பு என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொறுப்பான கண்காணிப்பு அதிகாரியுடன், அதிகாரிகள் குழுவை முக்கிய நிலையங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ரயில்வே ஊழியர்களும், அதிகாரிகளும் கடமைக்கு சமூகமளிக்கும் போதும், சேவையை முன்னெடுக்கும் போதும் அவர்களுக்குத் தேவையான முழுமையான பாதுகாப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரயிலை இயக்கும் போது கல் வீச்சு அல்லது ஏதேனும் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளைத் தடுக்க தகுந்த பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த சிறப்பு முன்னேற்பாடுகள் நேற்று நள்ளிரவு முதல் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக அமுல்படுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## திட்டமிட்டபடியே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அத்துடன், வங்கி வட்டி வீதத்தை குறைத்தல், 25,000 ரூபாவிற்கு வாழ்க்கைச் செலவு நிவாரணத்தை வழங்குதல், மின்சாரக் கட்டணத்தை குறைத்தல், ஓய்வூதியக் குறைப்பை உடனடியாக நிறுத்துதல் உள்ளிட்டவையும் பிற கோரிக்கைகளாக உள்ளன.

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளும் தொழிற்சங்க கூட்டமைப்பில், அரச வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், மின்சார பொறியியலாளர்கள், வங்கி சேவை ஊழியர்கள், பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள், வீதி அபிவிருத்தி, கல்வி நிர்வாகம், நில அளவை திணைக்களம், வருமான வரி உள்ளிட்ட தரப்பினர் பங்காளர்களாக உள்ளனர்.

அத்துடன், அனைத்துப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், தாதியர், சுகாதாரச் சேவை, தபால், அரச முகாமைத்துவ சேவைகள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்களும் பணிப்பகிஷ்கரிப்பிற்கு பூரண ஆதரவினை வழங்குவதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில், பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் மூத்த விரிவுரையாளர் சாரு தத்த இலங்கசிங்க, "ஆட்சியாளர்களுடன் முன்னெடுத்த எந்த ஒரு பேச்சும் வெற்றி பெறவில்லை ஆகவே திட்டமிட்டவாறு முன்னெடுக்கப்படுகின்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் நாம் முழுமையாக பங்கேற்போம். அது நிச்சயமாக வெற்றிபெறும்" - என்றார்.

இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கத்தின் பிர தான செயலாளர் ரஞ்சன் சேனநாயக்க, "எமது போராட்டம் மட்டுப்படுத்தப்படப் போவதில்லை. அது தொடர்ந்து முன்னெடுக்கப்படப்போகிறது. இதனால் நாட்டின் நிலைமைகள் மேலும் மோசம் அடையும். ஆட்சியாளர்கள் அது பற்றிக் கரிசனை கொள்ளவேண்டும் அவ்வாறில்லாத ஆட்சியாளர்கள் பொறுப்பற்று இருப்பார்களானால் அவர்கள் முகங்கொடுக்கவேண்டிய பல பிரச்சினைகள் அடுத்து வரும் நாட்களில் அதிகரிக்கும் அபாயம் நிலைமைகளை உள்ளன - என்றார்.

விசேட வைத்திய விரிவுரையாளர் சங்கத்தின் உறுப்பினர் பேராசிரியர் இந்திக்க கருணாதிலக்க, "சிறந்த தீர்வொன்று ஆட்சியாளர்களால் வழங்கப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அதற்கு எவ்விதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே போராட்டத்திற்கு எமது சங்கம் ஆதரவை வெளியிடுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது" என்றார்.

நாட்டின் தேசிய நீர் வளங்கள் வடிகால் அமைப்பு சபையின் வரி செலுத்துவோரின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாடாளர் மஞ்சுளா பெரேரா, "தொழிற்சங்கத்தின் நியாயமான போராட்டச் செயற்பாடுகளில் நாம் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளோம். அதனடிப்படையில் நாம் சகல அரச கருமச் செயற்பாடுகளிலிருந்தும் விலகி நிற்கவுள்ளோம். இதனால் நாட்டின் சில இடங்களில் நீர் வினியோகம் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்படும்" என்றார்.

அரச மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமல் விஜயசிறி, "ஆட்சியாளர்களுடனான பேச்சு தோல்வியைச் சந்தித்துள்ள நிலையில் திட்டமிட்டபடி போராட்டம் முன்னெடுக்கப்படும். அதற்கு எமது சங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். அதேநேரத்தில் அத்தியாவசிய அவசர சிகிச்சைகளை முன்னெடுப்பதற்கு வைத்தியர்கள் நிச்சயமாக ஒத்துழைப்புகளை வழங்குவார்கள். அந்த வகையில் முன்னெடுக்கப்படும் பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுப்போம்" - என்றார்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜலால், "மின்சார சபை தொழிற்சங்க பிரதிநிதிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் நிச்சயமாக நாட்டின் ஒட்டுமொத்த மின்சாரமும் முடங்கும் அபாயமே காணப்படுகிறது. அவ்வாறு இருக்கின்ற பொழுது நியாயமான கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் உடனடியாக தீர்த்து தரவேண்டும் என்பதே நமது வலியுறுத்தலாக உள்ளது" - என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், "ஆட்சியாளர்கள் மக்கள் பக்கம் நின்று சிந்திக்காது தனது இருப்பை மையப் படுத்தியே சிந்திக்கிறது. இதனால் சாதாரண மக்களின் நிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளன. இந்நிலையில் தான் இந்தப் போராட்டத்தில் அதிபர் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பங்கேற்று எதிர்ப்பினை வெளிப்படுத்த உள்ளோம்" - என்றார்.

## மத்திய வங்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேளையில் பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தினார்கள்.

அதனையடுத்து பேரணியில் பங்கேற்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து பேரணியை கைவிட்டு தாம் இலங்கை மத்திய வங்கியின் முன்றலில் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கப்போவதாக அறிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து சுமார் இரண்டரை மணிநேரமாக மத்தியவங்கிக்கு எதிர்ப்புறமாக நின்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் உரையாற்றிய மத்திய வங்கியின் தொழில் வல்லுநனர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் ஜயது பெரேரா,

செயலாளர் உரிய நேரத்தில் தீர்மானத்தை எடுக்கவில்லை என்று ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர் ஆனால் தீர்மானம் எடுக்க வேண்டியவர்கள் உரிய நேரத்தில் அந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை. தீர்மானம் எடுப்பதற்கான பொறுப்பு கூற வேண்டியவர்கள் தற்பொழுது மௌனமாக இருக்கின்றார்கள்.

இந்த நிலைமையை தான் நாம் எதிர்க்கின்றோம். ஆட்சியாளர்களைப் பொறுத்த வரையில் தொழில் வல்லுனர்களின் குரல்களை நசுக்கவே திட்டமிட்டு வருகிறது. சில நபர்களை பயன்படுத்தி சேறடிப்பு பரப்புரைகளையும் முன்னெடுக்கிறது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உண்மையான பொறுப்பு கூறலிருந்து விலகிவிட முடியாது. அதேநேரத்தில் இதுவொரு விளையாட்டு விடயம் அல்ல. மிக முக்கியமான தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியுள்ளது என்பதை ஆட்சியாளர்களள் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

## போரைவிடப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இராணுவத்தின் 18ஆவது விஜயபாகு காலாட்படையணி முகாமின் கட்டளை அதிகாரி மேஜர். உதித்த கலு ஆராச்சி தலைமையில் நடைபெற்ற இளைஞர் தன்னார்வ அணியின் அங்கத்தவர்களுக்கான தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வில் பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:

தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதில் இளைஞர் சமூகம் பாதிக்கப்பட்டு வருவது மன வேதனை தருகின்றது. சாரதிகளிடம் சுய ஒழுக்கம் இல்லாத காரணத்தினாலேயே வீதி விபத்துக்கள் நிகழ்கின்றன. ஒருவரை ஒருவர் முந்திச் சொல்ல வேண்டும், வாகனங்கள் ஓட்டுவதில் தங்களது வீரத்தினை நிரூபிக்க வேண்டும் என்ற நப்பாசையினால், வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன், தற்காலத்தில் போரைவிட, வீதி விபத்துக்கள் பயங்கரமானவையாகக் காணப்படுகின்றன.

இந்த நிலை எதிர்காலத்தில் மாற்றம் அடைய வேண்டும். இதற்கு இளைஞர்கள் ஒவ்வொருத்தரும் முன்வந்து, வாகனங்களை செலுத்தும் போது பாதுகாப்பான உரிய பொருட்களுடன் செல்லவேண்டும் - என்றார்.

## ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குனர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்தில், சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கம் பாரிய சீர்திருத்தங்களை ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளோம்.

இலங்கையை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னர் கடன் வழங்குநர் குழுவுடன் இணக்கம் காணப்பட்ட எந்தவொரு கடன் நிபந்தனைகள் தொடர்பிலும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதில் நாம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குனர்களுடன் இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர், வர்த்தக கடன் வழங்குநர் அல்லது கடன் வழங்குநர் குழுவுடன் கடன் உடன்படிக்கைகள் முடிவிற்கு கொண்டுவரப்பட மாட்டாது.

கடன் வழங்குநருக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் நோக்கில், இலங்கை எந்தவொரு கடன் வழங்குநருடனும் இடைக்கால உடன்படிக்கையில் ஈடுபடவில்லை - என்றார்.

இதேவேளை, இந்தியா சீனா சவுதி அரேபியா பாகிஸ்தான் ஹங்கேரி மற்றும் குவைட் ஆகிய நாடுகளுக்கும் பாரிஸ் கழகத்திற்கும் இலங்கை அரசு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

நெருக்கடியான தருணத்தில் இலங்கையுடன் துணை நின்று சர்வதேச நாணய நிதியத்திற்கு கடன் மறுசீரமைப்பு உத்தரவாதங்களை வழங்கியமைக்காக இலங்கையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் பங்கேற்று வரும் அமைச்சர் சப்ரி மேற்படியான கருத்துக்களை வெளியிட்டுள்ளதுடன், பல்வேறு பக்க நிகழ்வுகளிலும் பங்கேற்று வருகின்றார்.

## மார்ச் 23 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறும் நேரத்தில் மட்டும் வர்த்தக நிலையங்களையும் மூடி மீனவர்களின் கோரிக்கைக்கு ஒத்துழைக்குமாறு வர்த்தக சங்கத்திடமும் கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் இடம்பெறும் இந்த முதலாவது ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கின் ஏனைய 3 மாவட்ட மீனவர்களின் ஒத்துழைப்பினையும் பெறுவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

## தேசிய மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அளவு, ரணிலின் வாழ்க்கை உச்ச அளவு வரிச்சுமையும் எல்லையில்லை, வாழ்க்கைச் செலவும் உச்சநிலை தேர்தலை நடத்து, ஜனநாயகத்திற்கு வேட்டுவைக்காதே - என்பன போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் எழுப்பினர்.

இந்த வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும், கல்முனைத் தொகுதி அமைப்பாளருமான ஏ.ஆதம்பாவா தெரிவித்ததாவது:

கல்முனை மாநகர சபையில் இடம் பெற்றுள்ள நிதி மோசடி, ஊழல் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகலரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு மக்கள் பணம் மீளப்பெறப்படுவதுடன், உரிய தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

மக்களின் பணம் மூன்று கோடிக்கு மேல் சூறையாடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 1994 ஆம் ஆண்டு முதல் மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் முஸ்லிம் காங்கிரசும் இது விடயத்தில் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்த நிதிமோசடியின் பின்னணியில் செயற்பட்டவர்களையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

இதேவேளை மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைக் கோரி நிற்கும் நிலையிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் மக்கள் அலை அலையாகத் திரண்டு வருவதைக் கண்ட அச்சத்திலுமே ஜனாதிபதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவதற்கு பகீரதப் பிரயத்தனங்களை முன்னெடுத்துள்ளார் - எனத் தெரிவித்தார்.

## கொக்கிளாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வைத்துத் துன்புறுத்தப்படுகிறார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கரைவலைத் தொழிலில் ஈடுபடுவதற்காக முல்லைத் தீவிற்கு அழைத்து வரப்பட்ட மீனவர் துன்பம் தாங்க முடியாமல் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றார் என்கிற குற்றச்சாட்டில் நீண்ட நேரம் நின்றுகொண்டே இருக்கும் வகையில் மரத்தில் தொடங்கவிட்டுக் கட்டப்பட்டார் என்றும் அவரது உடல் முழுவதும் வலைபோட்டு மூடப்பட்டு அவர் சித்திரவதை செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பான ஒளிப்படமும் காலைக்கதிர் பத்திரிகைக்கு அனுப்பப்பட்டது.

கருநாட்டுக்கேணியில் நீர்கொழும்பைச் சேர்ந்த ஒருவர் கொழும்பு மீன்பிடி அமைச்சின் அனுமதியுடன் தொழில் செய்து வருகின்றார். இவர் அங்கு அனுமதியின்றி கரையோரமாக நிரந்தரக் கட்டடம் அமைத்துள்ளார் என்று அதிகாரிகளால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதனை இடிக்குமாறு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்துவிட்டு தொடர்ந்தும் தொழில் செய்து வருகின்றார்.

அத்துடன் அவர் பல்வேறு அடாவடிகள் அத்துமீறல்களில் ஈடுபடுகின்றார் என்றும் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. என்ன குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் பொலிஸார் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கரைவலைத் தொழிலிலும் ஈடுபடும் அவர், அந்தப் பணிக்காக மட்டக்களப்பிலிருந்து ஓர் இளைஞரை அழைத்து வந்துள்ளார். சிறிது நாள்களில் அந்தப் பணி கடினமாக இருந்த காரணத்தால் அந்த இளைஞர் அங்கிருந்து வெளியேற விருப்பப்பட்டு அதனை சம்மாட்டியாரிடம் சொல்லியுள்ளார். ஆத்திரப்பட்ட அவர் அந்த இளைஞரை அடித்துத் துன்புறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து அங்கிருந்து தப்பியோடிய இளைஞரை விரட்டிப் பிடித்து வந்து, தொடர்ந்து பல மணி நேரமாக நின்று கொண்டே இருக்கும் வகையில் மரத்தில் கட்டி வைத்துச் சித்திரவதைப்படுத்தியுள்ளார். அவர் கயிறுகளை அவிழ்த்துக் கொண்டு தப்பியோடிவிடாதபடி அவர் மீது மீன்பிடி வலையைப் போட்டு மூடியுள்ளார்.

இவ்வாறு அந்த இளைஞர் காலை முதல் மாலைவரை நின்றுகொண்டே இருந்தார் என்று நேரில் பார்த்த சாட்சிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் இந்த கரைவலைப் பாட்டுத் தொழிலில் இணையும் பலர் தொழில் நெருக்கடி காரணமாக இடையில் விலகிச் செல்வது வழமை என்றும், இதனால் ஆத்திரமடையும் நீர்கொழும்பு சம்மாட்டி அவர்களை இப்படித் துன்புறுத்துகிறார் என்றும் அயலில் உள்ள மீனவர்கள் தகவல் தெரிவித்தனர்.

மீனவர் கட்டி வைத்துச் சித்திரவதைப்படுத்தப்படும் சம்பவம் தொடர்பில் பிரதேச செயலாளருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அவர் உடனடியாகப் பொலிஸாருக்கு இது குறித்து அறிவித்து விசாரணை நடத்தும்படி கேட்டுக்கொண்டார். தாம் விசாரணைக்காகச் சம்பவ இடத்திற்குச் சென்றபோது குறித்த இளைஞரை அவரது சொந்த ஊரான மட்டக்களப்பிற்கு வாடி உரிமையாளரே அழைத்துச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

## போராட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொள்ளப் போவதில்லை என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, தொடருந்து துறைசார் சில தொழிற்சங்கங்கள், பணிப்புறக்கணிப்பில் பங்கேற்காது என்று அறிவித்துள்ளன.

தொடருந்துகள் ஒழுங்குபடுத்தல் சேவையாளர்கள், தொடருந்து நிலைய அதிபர், இயந்திர சாரதிகள், தொழில்நுட்பவிலாளர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட உள்ளதாக முன்னதாக அறிவிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும், தொடருந்து நிலைய அதிபர் சங்கம், தொடருந்து கட்டுப்பாட்டாளர் சங்கம் மற்றும் ரயில் கடவை காவலாளர்கள் சங்கம் என்பன நாளைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடாது பின்னிரவில் தீர்மானித்து அறிவித்துள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622






# வன்னியில் புனித பாறையை இடிக்க அரசு அனுமதியளிப்பு!

## மக்கள் கடும் எதிர்ப்பு





வன்னியில் வாழும் இந்துக்களால் வழிபடப்பட்ட பாறையை இடித்தழிக்க அரசு அனுமதி வழங்கியமை தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் பூவரசங்குளம் பகுதியில் அமைந்துள்ள பாறையில் (சிறிய மலை) வெளிநபர் ஒருவருக்குக் கருங்கல் அகழ்விற்குப் பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாறையில் முன்னெடுக்கப்படவுள்ள கருங்கல் அகழ்வை நிறுத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள கிராம மக்கள், இந்த மலை பல ஆண்டுகளாக மத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறியுள்ளனர்.

அந்தப் பாறையின் உச்சியில் அந்தப் பகுதி மக்கள் ஆதி காலம் முதலே பிள்ளையாரை வழிபட்டு வருகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெரும்போக மற்றும் சிறுபோக அறுவடைக்குப் பின்னர் கிராம மக்கள் ஒவ்வொரு ஆண்டும் பாறையின் உச்சியில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களின் எதிர்ப்பை கருத்திற் கொண்டு வவுனியா பிரதேச செயலாளர் ஞா.கமலதாசன் மற்றும் பிரதேச சபைத் தலைவர் த.யோகராஜா ஆகியோர் மார்ச் 8 ஆம் திகதி அந்த இடத்திற்கான கண்காணிப்பு பயணத்தில் ஈடுபட்டனர்.

அந்த இடத்தில் பழங்காலத்திலிருந்தே வழிபட்டு வந்த கல் தூண் தற்போது இல்லாமல் போயுள்ளன எனவும், எனினும் அண்மையில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாறை ஒரு வழிபாட்டுத் தலம் என்பதை அறிந்த பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்களம் மற்றும் சுற்றாடல் அதிகாரசபையுடன் கலந்துரையாடி இது தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாகப் பிரதேச வாசிகளுக்கு அறிவிப்பதாக உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு, மகாவலி அதிகாரசபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம், வனப் பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு திணைக்களங்கள் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களின் காணிகளைப் பலவந்தமாகக் கையகப்படுத்துவதாகத் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்ததும் அமைச்சரவை மாற்றம்

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்த பின்னர் அமைச்சரவையில் மாற்றம் வரும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன்போது எதிரணியில் உள்ளவர்களும் அரசுடன் இணைவார்கள் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

# 2023 ஐ நல்லிணக்க மீட்சி ஆண்டாக அடையாளப்படுத்துகிறது இலங்கை

## வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன கருத்து

இலங்கையில் 2023 ஆம் ஆண்டை நல்லிணக்கம், மீட்சி மற்றும் தேசிய ஒற்றுமைக்கான ஆண்டாக அடையாளப்படுத்தியுள்ளதாக வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய தினத்தை முன்னிட்டு வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவால் சமாதானத்துக்கான பொதுநலவாய தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் பகிரப்பட்ட மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தும் வகையில், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அமைதிக்கான கூட்டு அர்ப்பணிப்பாக உறுப்பு நாடுகளால் அமைதிக்கான பொதுநலவாய நாடுகளின் கொடியை ஏற்றுவது, பொதுநலவாயச் செயலகத்தால் இந்த ஆண்டு – நிலையான மற்றும் அமைதியான பொது எதிர்காலத்தை உருவாக்குதல் – என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு முயற்சியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# விமல் மீதான பிடியாணையை மீளப்பெற்றுள்ளது நீதிமன்றம்



வழக்கு ஒன்றுக்கு ஆஜராகத் தவறியமைக்காக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை மீளப்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நகர்த்தல் பத்திரம் மூலம் நீதிமன்றில் முன்னிலையாகிதை அடுத்து நீதிமன்றம் பிடியாணையை மீளப்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் 6 பேருக்கு எதிராகக் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு, கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தக் கைது பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செயிட் அல் ஹூசைன் இலங்கைக்கு விஜயம் செய்த போது, கொழும்பு, தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தைச் சுற்றியுள்ள வீதிகளை மறித்து பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, வீரகுமார திஸாநாயக்க, பிய சிறி திஸாநாயக்க, மொஹ மட் முஸம்மில், ஜயந்த சமரவீர மற்றும் ரொஜர் செனவிரத்ன உள்ளிட்ட 7 பேர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

# சாட்சி சொல்வதற்கு நீதிமன்றம் வந்தவர் மயங்கி விழுந்து சாவு!

நீதிமன்றத்துக்குச் சாட்சி வழங்க வந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் வெலிமடையில் இடம்பெற்றுள்ளது.

இன்று வெலிமடை நீதிமன்றத்துக்கு வழக்கு ஒன்றில் சாட்சி சொல்வதற்காகக் கம்பளையில் இருந்து 62 வயதுடைய முதியவர் ஒருவர் வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த முதியவர் வெலிமடை நீதிமன்ற உள்நுழையும் நுழைவாயில் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு வெலிமடை வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த முதியவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வெலிமடை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வெலிமடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மேல் மாகாணத்தில் ஒத்திவைக்கப்பட்டன

## தவணைப் பரீட்சைகள்

மேல் மாகாணத்தில் இன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த சில தரங்களுக்கான தவணைப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

மேல் மாகாண கல்வித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 9, 10 மற்றும் 11ஆம் தரங்களுக்கான, தவணைப் பரீட்சை இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த பரீட்சைகள் எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண கல்வித் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இன்று ஆசிரியர் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசு இறங்கி வருமா?

**தொழிற்சங்கங்கள் இன்று அழைப்பு விடுத்துள்ள பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முழு வெற்றிபெற்றாலும்கூட ஆட்சியாளர்கள் வரியைக் குறைக்கும் விடயத்தில் இறங்கி வருவார்கள் போன்று தோன்றவில்லை. குறைந்தபட்சம் பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடன் கைகளுக்குக் கிடைக்கும் வரையில் வரி மறுசீரமைப்புக் குறித்து இளகிவரும் எண்ணம் ஆட்சியாளர்களிடம் கிடையாது.**

**பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை தலை நிமிர்வதற்கு இருக்கும் ஒரேயொரு வாய்ப்பாக செலாவணி நிதியத்தின் 2.9 மில்லியன் கடன் உதவியையே அரசு எதிர்பார்த்திருக்கிறது. அதனிடம் வேறு மாற்று வழிகள் ஏதுமில்லை. அப்படியிருக்கும்போது நிதியத்தின் நிபந்தனையான துண்டுவிழும் தொகையின் இடைவெளியைக் குறைப்பதற்கு வரி அறவீட்டை அதிகரிப்பதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் ஆட்சியாளர்களிடம் இல்லை.**

**பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், உயர் கடன் வட்டி வீதங்களுக்கு மத்தியில் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதும் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதும் உற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதும் கூட ஆட்சியாளர்களுக்கு முடியாத காரணத்தால் நாணய நிதியத்திடம் தஞ்சமடைவது தவிர வேறு எந்தவொரு வழியையும் ஆட்சியாளர்கள் கொண்டிருக்கவில்லை. எனவே தொழிற்சங்க நடவடிக்கைகளை அடக்குவதற்கும் அதன் கோரிக்கைகளுக்கு இணங்கிப் போகாதிருப்பதற்குமே ஆட்சியாளர்கள் முயல்வார்கள்.**

**கட்சிகளையும் தரப்புகளையும் பிரிப்பதிலும் உடைப்பதிலும் கைதேர்ந்தவரான அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனது கைங்கரியத்தை தொடருந்து தொழிற்சங்கங்கள் மத்தியில் நேற்றே தொடங்கிவிட்டார். நேற்றிரவு வரை இன்றைய பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்து வந்த தொடருந்து சார்ந்த சில தொழிற்சங்கங்கள், பின்னிரவுக்குப் பின்னர் தமது ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பணிக்குத் திரும்பியுள்ளன.**

**எதிரவரும் நாள்களில் இத்கைய பல சம்பவங்களை பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இன்றைய போராட்டம் இனி வரும் நாள்களில் தீவிரமடைந்தாலும்கூட, படையினரைக் கொண்டு அத்தியாவசிய சேவைகளைக் கொண்டு நடத்தும் ஏற்பாடுகளுக்கு ஆட்சியாளர்கள் செல்வார்களே தவிர இறங்கி வருவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவே. அதிலும் குறிப்பாக செலாவணி நிதியக் கடன் கைகளுக்குக் கிடைக்கும் வகையில் அதற்கான சாத்தியங்கள் இல்லை.**

**இந்த நிலையில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த மக்கள் கிளர்ச்சி ஒன்றின் மூலமே இந்த ஆட்சியாளர்களுக்கு குறைந்தபட்சி அழுத்தத்தையாவது வழங்க முடியும். ஆனால், இது விடயத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதற்கான இடைவெளியும் அதிகரித்திருப்பதால் நிலைமை இப்போதைக்கு திரிசங்கு சொர்க்கத்தின் நிலையில் இருந்து மேம்படுவதற்கான வாய்ப்புக்கள் தெரியவில்லை.**

**எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதும் இன்று பெரும் சவாலாக மாறியுள்ளது. தேர்தல் காலம் என்பதால் இனவாதத்திலிருந்து வெளிவந்து வெளிப்படையான கருத்துக்களைத் தீர்வு தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு முக்கியமான எதிர்க்கட்சிகள் தயங்குகின்றன. அப்படிச் செய்வது தேர்தலில் தமது வெற்றி வாய்ப்பை பாதிக்கும் என்று அவை கருத்துவதால் கட்சிகளின் ஒன்றிணைவு என்பது குதிரைக் கொம்புதான் அதே நேரம் அந்த ஒன்றிணைவு இல்லாம் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை அசைத்துப் பார்ப்பதும் சிக்கலானதுதான்.**

# உயர் நீதிமன்றத்தின் தடை உத்தரவை சவாலுக்குட்படுத்தும் நோக்கம்கிடையாது

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் கூறுகிறார்



உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக 2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை மீள் பரிசீலனை செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அறிவுறுத்தியுள்ளோம்.

நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவை சவாலுக்கு உட்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஆண்டு ஜூலை மாத காலப்பகுதியில் முன்வைத்த மதிப்பீட்டு செலவுக்கும் தற்போதைய செலவுகளுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, செலவு தொகையை மறுசீரமைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் குறிப்பிட்டுள்ளோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கும். நிதி நெருக்கடிக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் அல்லது நாணயம் அச்சிட்டால் பணவீக்கம் மீண்டும் உயர்வடையும், பொருளாதார நெருக்கடி மீண்டும் தீவிரமடையும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு இம்மாத இறுதிக்குள் கிடைக்கப்பெறும். இவ்வாறான நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்த முடியாமல் போகும்.

வரி அதிகரிப்புக்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினர் மனசாட்சியுடன் செயற்பட வேண்டும். மாதம் லட்சக்கணக்கில் சம்பளம் பெறுபவர்கள் தான் தற்போது 10 ஆயிரத்திற்கும் குறைவான வரி செலுத்துவதை எதிர்க்கிறார்கள்.

கொவிட் பெருந்தொற்று காலத்தில் மாதகணக்கில் அரச சேவை முடக்கப்பட்டிருந்த போதும் அரச சேவையாளர்களின் சம்பளம் முடக்கப்படவில்லை. பகுதியளவில் குறைக்கப்படவுமில்லை, உரிய நேரத்தில் சம்பளம் வழங்கப்பட்டது.

கொவிட் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகள் கூட அரச சேவையாளர்களுக்கான சம்பளத்தை பகுதிளவில் மட்டுப்படுத்தின. ஆனால் அப்போதைய அரசாங்கம் அந்தளவிற்கு செல்லவில்லை.

பொருளாதார ரீதியில் இருந்து மீட்சி பெற வேண்டுமாயின் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தொழிற் சங்கத்தினர் என்று குறிப்பிட்டுக்கொள்ளும் தரப்பினர் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுகிறார்கள்.

நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்ட சிறப்புரிமை மீறல் பிரச்சினையை எதிர் தரப்பினர் தமது அரசியல் பிரசாரத்துக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். நீதிமன்றத்தை சவாலுக்கு உட்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. - என்றார்.

# சட்டவிரோதமாக ஆஸிக்குள் நுழைய எந்தவித சாத்தியமும் கிடையாது

## உயர்ஆணையர் போல் ஸ்டீபன்ஸ் எச்சரிக்கை

ஆஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு எச்சரிக்கையொன்றைவிடுத்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசிக்க எவ்வித சாத்தியங்களும் கிடையாது என இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர் ஆணையர் போல் ஸ்டீபன்ஸ் தெரிவித்துள்ளார். சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க இலங்கையும், ஆஸ்திரேலியாவும் இணைந்து செயற்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட் டுள்ளார்.

அண்மைய நாள்களில் சில இலங்கையர்கள் ஆஸ்திரேலியாவிற்கு படகு மூலம் செல்ல முயற்சித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்து அங்கு குடியேறுவதற்கு பூச்சிய வாய்ப்பே உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா பிரவேசித்த எவரும் நாட்டில் குடியேற வாய்ப்பு கிடையாது எனவும், ஏதிலி அந்தஸ்து வழங்கப்படாது எனவும் ஸ்டீபன்ஸ் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் இல்லை ஆசிரியர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லை

## கிளிநொச்சி தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் கற்றல் உபகரணங்களை மாணவர்கள் வாங்குவதற்கு முடியாமல் திண்டாடுகின்றனர் எனவும், ஆசிரியர்கள் போக்குவரத்து உள்ளிட்ட சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர் ஆலோசகர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து தொழிற்சங்க போராட்டம் தொடர்பில் ஊடக சந்திப்பொன்றை திங்கட்கிழமை ஏற்பாடு செய்தனர். இதன்போது மேற்கணடவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர் ஆலோசகர் சங்க செயலாளர் ரி.நிகேதன் தெரிவித்ததாவது:

மார்ச் 15 ஆம் திகதி தேசிய ரீதியிலே முன்னெடுக்கப்படுகின்ற அடையாள பகிஷ்கரிப்பை கிளிநொச்சி மாவட்டத்தினுடைய ஆசிரிய ஆலோசகர் சங்கமும் தேசிய ஆசிரிய ஆலோசகர் சங்கத்தோடு இணைந்து மேற்கொள்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

எங்களுடைய இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பெரும்பாலான ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதருபவர்கள். அவர்கள் இங்கு வருகை தருகின்றபோது ஏற்படுகின்ற போக்குவரத்து செலவு, அவர்களின் தங்குமிடம் முதலானவற்றைப் பார்க்கின்ற பொழுது பொருளாதார நெருக்கடி அவர்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. அதைவிட, அவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேற் கொண்டு செல்வதற்குரிய செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுடைய செயற்பாடுகள் முடங்குகின்ற தன்மையில் இருக்கின்றது. எமது மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்கள் வறுமைக்கோட்டுக்குப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் புதிய கல்வி ஆண்டிலே கால் தடம் பதிக்கவுள்ளனர். தமது கற்றலுக்குரிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதென்பது இயலாத ஒன்றாக இருக்கின்றது.

அந்த வகையில், எங்களுடைய மாணவர்களும் ஆசிரியர்களும் பொருளாதார நெருக்கடியில் தவித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, அதிலிருந்து மீள வேண்டும் என்ற நோக்கத்தோடு தேசிய ரீதியிலே எடுக்கப்படுகின்ற இந்த அரசாங்கத்துக்கு எதிரான ஒரு நாள் பகிஷ்கரிப்பிலே கிளிநொச்சி மாவட்டம் சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள். ஆசிரிய ஆலோசகர்கள், அனைவரும் இணைந்து முகம் கொடுக்கின்றோம்.

பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அதிபர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அரச உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கு அரசாங்கம் சரியான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட சங்க செயலாளர் ரி.சிவரூபன் கருத்து தெரிவிக்கையில் -

எதிர்வரும் 15 ஆம் திகதி தேசிய மட்டத்திலே முன்னெடுக்கப்படுகின்ற வேலை நிறுத்த போராட்டத்துக்கு கல்வித்துறை சார்ந்த கூட்டமைப்பாகிய அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் இணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பாக நாங்கள் இந்த



வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றோம்.

குறிப்பாக 8 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது. ஏற்கனவே அதிபர் ஆசிரியர்களுக்கு வழங்குவதாக உடன்பட்டிருந்த சம்பள உயர்வில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மிகுதி மூன்றில் இரண்டு பங்குகளை வழங்குமாறு கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

அந்த மூன்றில் இரண்டு பங்கை வழங்கும்வரைக்கும் அனைத்து அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் 20 ஆயிரம் ரூபா இடைக்கால கொடுப்பனவை வழங்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அது மாத்திரமல்லாது மாதசம்பளத்துக்கு விதிக்கின்ற வரியை அரசாங்கம் உடனடியாக நீக்கி அதற்கான தீர்வைத் தருவதுடன், ஆசிரியர்களால் பெறப்பட்டிருக்கின்ற வங்கிக் கடன்களுக்கு, அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள வட்டி வீதத்தை உடனடியாக குறைத்து, அவர்களின் சுமையை குறிக்க வேண்டும்.

பிள்ளைகள் மத்தியில் இருக்கின்ற போசனைக் குறைபாடு, கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்புக்கள் மற்றும் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்க வேண்டும்.

மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய சேவைகளுக்காகப் பெற்றோர்களிடமிருந்து பணத்தை அறவிடுகின்ற போது ஏற்படும் பெற்றோரின் சுமையைக் குறைக்க வேண்டும். ஜனநாயகத்தைச் சீர்குலைப்பதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதை நிறுத்தி உடனடியாக தேர்தலுக்கு வரவேண்டும் என நாங்கள் இந்தக் கூட்டமைப்பாகக் கோரிக்கை முன்வைக்கின்றோம்.

அத்துடன், பொதுமக்கள் போராட்டங்களின்போது அரசின் அடக்குமுறையை நிறுத்தி மக்களுடைய ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கவேண்டியகட்டாயத்திலே அரசாங்கம் செயற்பட வேண்டும் என அழுத்தமாகக் கூறுகின்றோம். 40 இற்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களாக இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகக் கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளோம்.

இவ்வாறான கோரிக்கைகளைச் செய்து தராமல் இழுத்தடிப்பு இடம்பெறுமாக இருந்தால், தொழிற்சங்க நடவடிக்கையின் அடுத்த கட்டத்திற்குத் தள்ளப்படுவோம் என்பதையும் கூறிக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத்தின் செயலாளர் கெ.விக்னராஜா மற்றும் கிளிநொச்சி மாவட்ட இலங்கைத - தமிழ் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் இ.ஜெயசுதர்சன் ஆகியோர் குறித்த போராட்டத்திற்கு தமது சங்கமும் ஆதரவு தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆர்பாட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு

இன்று இடம்பெறவுள்ள பணிபுறக் கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதுடன் வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா செய்தியாளர்களைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடி காரணமாக ஆசியர்கள்,அதிபர்கள் உட்பட அனைத்து அரச ஊழியர்களும் இடர்பாட்டுக்குள் இருக்கின்றோம். இந்நிலையில், எமது சம்பள உயர்வைக் கோரி இன்று வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட இருக்கின்றோம்.

சுபோதினி ஆணைக்குழுவின் படி மூன்றில் ஒருபகுதி சம்பள உயர்வு வழங்கப்பட்டது. மீதி அதிகரிப்பு இன்றுவரை வழங்கப்படவில்லை. இப்போது பொருளாதார சுமை அதிகரித்துள்ள காலத்தில் அதனை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடுசெய்யவேண்டும்.

அல்லது இருபதாயிரம் ரூபா இடைக்கால கொடுப்பனவை வழங்குவதற்காவது நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அத்துடன் அரசால் பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் நீக்கப்படவேண்டும். இவற்றை வலியுறுத்தி இன்று (புதன்கிழமை) அடையாள பணிபகிஷ்கரிப்பை முன்னெடுப்பதுடன், இன்று காலை 9 மணிக்கு வவுனியா பழைய பஸ் நிலையத்தின் முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தையும் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அதில் அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள், தொழிற்சங்க உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம். - என்றனர்.

# நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளூராட்சிமன்ற தேர்தல் தீர்வைதராது!

## அமைச்சர் பந்துல திட்டவட்டம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க முடியாது. தற்போதுள்ள சூழலில் ஒவ்வொருவரும் தத்தமது அரசியல் தேவைகளுக்காகவே தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றனர் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களைஅறிவிக்கும்ஊடகவியலாளர்மாநாடு இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தேர்தலை நடத்தக் கூடிய சந்தர்ப்பம் காணப்பட்டால் தேர்தல் ஆணைக்குழு அதற்கான நடவடிக்கையை எடுக்கும்.

எவ்வாறிருப்பிரும் தற்போதுள்ள நிலைமையில் தேர்தலை நடத்துவதில் காணப்படும் நெருக்கடி தொடர்பாகத் திறைசேரி செயலாளரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் எந்தவொரு பிரச்சினையும் காணப்படாத போதிலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமை குறித்து எவரும் கேள்வி எழுப்பவில்லையே? அத்தோடு மாகாணசபை தேர்தல் இது-வரையிலும் நடத்தப்படவில்லை. அதனை நடத்துமாறு வலியுறுத்தி இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லையல்லவா?

1979 களில் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது முதலில் சென்று வாக்களிக்கும் ஐவர் கொல்லப்படுவர் என்றும், தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

கூறியதைப் போன்றே முதலில் வாக்களித்த ஐவர் கொல்லப்பட்டனர். இவ்வாறு தத்தமது அரசியல் தேவைகளுக்கமைய தேர்தலை நடத்துமாறும், நடத்த வேண்டாமெனவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட வரலாறு எம் நாட்டில் காணப்படுகிறது.

தற்போதுள்ள நெருக்கடிகளை தேர்தல் தீர்க்குமானால் முதலில் நடத்த வேண்டியது தேர்தலையாகும். ஆனால் நிதி நெருக்கடிகளுக்கு அரசியல் ரீதியில் எந்தவொரு தீர்வையும் வழங்க முடியாது. - என்றார்.

# மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த தவணை இரட்டிப்பாக்கப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்



பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தை இரட்டிப்பாக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதேஅவர்இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் -

தற்போதுபாடசாலைமாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும்தேசியவேலைத்திட்டம்அடுத்த பாடசாலை தவணை ஆரம்பத்திலிருந்து இரட்டிப்பாக்கப்படும்.

அமைச்சகம் தற்போது 11 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவை வழங்கி வருகிறது.

இந்த திட்டம், அமெரிக்க எய்ட் நிறுவனம், உலக உணவுத் திட்டம் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவுடன் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப் பட்டது.

மேலும் குறித்த மதிய உணவு வழங்கும் தேசிய வேலைத் திட்டம் அடுத்த பாடசாலை தவணை ஆரம்பத்திலிருந்து இரட்டிப்பாக்கப்படும். - எனத் தெரிவித்துள்ளார்.

# அரச வருமானம் அதிகரித்தால் மானியங்கள் வழங்கப்படும்

## அமைச்சர் பந்துல கூறுகின்றார்

வரி சீர்திருத்தங்களால் அரச வருமானம் அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் மானியங்களை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச் சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

அரச ஊழியர்களில் நூற்றுக்கு 10 வீதமானவர்கள் மாத்திரமே புதிய வரிசீர்த்திருத்தத்துக்கு உள்வாங்கப்படுகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

புதிய வரிச்சீர்த்திருத்தத்தில் அரசாங்கத்துக்கு வருமானம் அதிகரித்தால், அனைத்து அரச ஊழியர்களுக்கும் மானியம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# களவாடப்பட்டுள்ள தொலைபேசிகள்!

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் 8 ஆயிரத்து 422 கையடக்க தொலைபேசிகள் களவாடப்பட்டுள்ளன.

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

காணாமல் போகும் தொலைபேசிகளை கண்டறியும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு முதல் பொலிஸார் விசேட திட்டமொன்றை அறிமுகம் செய்திருந்தனர்.

இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதுமுதல்இதுவரையில் ஆணைக்குழுவிற்கு தொலைபேசி காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில்134,451முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2021ஆம் ஆண்டில் சுமார் 28 ஆயிரம் தொலைபேசிகள் காணாமல் போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மருத்துவப் பயிற்சிக்கான வைத்தியசாலைகளை

## அடையாளம்காணக் குழு

அரச பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் மருத்துவப் பயிற்சிக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஏனைய பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்காக, போதனா வைத்தியசாலைகளாகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான அரச வைத்தியசாலைகளை இனங்காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொலவின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் ஆர்.எம்.சமன் குசும்சிறி ரத்நாயக்க, சுகா தார அமைச்சின் மேலதிக செயலாளர் (மருத்துவ சேவைகள்) வைத்தியர் ஏ.கே.எஸ்.டி.அல்விஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, சிரேஷ்ட சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் பேராசிரியர் மொஹான் டி சில்வா ஆகியோர்நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஸ்ரீ ஜய-வர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சத்திர சிகிச்சை கற்கைகள் பேராசிரியர் பவந்த கமகே, சிரேஷ்ட எலும்பியல் மற்றும் ஆர்த்தோபெடிக்ஸ் கலாநிதி நரேந்திர பின்டோ, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் நாமல் விஜேசிங்க, இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் வஜிர திஸாநாயக்க, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ன சிறிசேன, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் ஜே. பலவர்தன, சுகாதார அமைச்சின் தாதியர் பணிப்பாளர் (மருத்துவ சேவைகள்) ஆர். எல்.எஸ்.சமன்மலி ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், வைத்தியர் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை, லைசியம் கெம்பஸ் மற்றும் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருநாகல் மற்றும் பொலன்னறுவை ஆகிய பல் கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மருத்துவ மாணவர்களுக்காக போதனா வைத்தியசாலையாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற அரச வைத்தியசாலைகள், ஆய்வு செய்தல், மீளாய்வு செய்தல், இனங்காணல் மற்றும் மருத்துவப் பயிற்சியை வழங்குவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் என்பன தொடர்பில் இந்தக் குழு ஆராயும்.

இதன்படி, இனங்காணப்படும் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமானநடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும் என்பதுடன், எட்டுவாரங்களுக்குள் குழுவின் இணங்கானல் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தக் குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# வஜிர எச்சரிக்கை



பணி பகிஷ்கரிப்பு மேற்கொண்டு நாட்டை அராஜகமாக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

நாடு அராஜகமானால் 25வருடங்களுக்கு மீண்டும் கட்டியெழுப்ப முடியாமல் போகும் . அதனால் நாடு அராஜகமாகுவதை தடுப்பதற்கு அரசாங்கம் பின்வாகப்போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமானசிறிகொத்தவில் செவ்வாய்க் கிழமை (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்கங்கள் இன்று பணி பகிஷ்கரிப்பு போராட்டம் மேற்கொள்வதற்கு தீர்மானித்திருக்கிறது.

என்றாலும் இவர்களின் போராட்டம் வெற்றிபெறப்பாவேதில்லை. அது தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை. ஏனெனில் தொழிற்சங்க போராட்டத்தில் கலந்துகொள்வதாக ஏற்கனவே அறிவித்திருந்த பல தொழிற்சங்கங்கள் தற்போது அந்த தீர்மானத்தில் இருந்து விலகியிருப்பதாக அறிவித்திருக்கின்றன.

இருந்தபோதும் தொழிற்சங்க போராட்டம் மேற்கொண்டு நாட்டை அராஜகமாக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தொழிற்சங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

நாடு அராஜகமாகினால் 25வருடங்களுக்கு மீண்டும் நாட்டைகட்டியெழுப்பமுடியாமல்போகும். இதனை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தின் புதிய வரி அதிரிப்புக்கு நூற்றுக்கு 3வீதமானவர்களே ஆளாகப்போகின்றனர்.

ஆனால் அதற்கு எதிராக 97வீதமானவர்கள் வீதிக்கிறங்கி, அந்த வரியை இல்லாமலாக்க போராடினால் சாதாரண மக்களே பாதிக்கப்படுவார்கள்.

இதனை சாதாரண மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிக சம்பளம் பெறுபவர்களிடம் அறவிடப்படும் இந்த வரி, தற்காலிகமானது. சில மாதங்களுக்கு பின்னர் அது ரத்துச்செய்யப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் நாடு வீழ்ச்சியடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தது ரணில் லிக்ரமசிங்கவாகும்.

தற்போதும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்பவே ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதன்போது சில தீர்மானங்களை எடுக்கும்போது அது கஷ்டமாக இருக்கும்.

என்றாலும் நாங்கள் அனைவரும்இதனைகொஞ்ச காலத்துக்கு பொறுத்துக் கொள்ளவேண்டிஇருக்கிறது. கடந்த 7,8 மாதங்களுக்கு முன்னர்நாடுஎந்தநிலையில் இருந்தது என்பது நாட்டு மக்களுக்கு தெரியும்.

முழு நாடு அராஜக நிலையில் இருந்தபோது நாட்டைபொறுப்பேற்றுநடத்த யாரும் முன்வராத நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க முன்வாந்தார்.

அதனால்வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தைக்கட்டியெழுப்பநாங்கள் அனைவரும் அவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டை படிப்படியாக முன்னேற்றி, சுமுக நிலையை ஏற்படுத்தி வரும் இந்த சந்தர்ப்பத்தில், நாட்டில் பணிபகிஷ்கரிப்பு போராட்டங்களை மக்கள் எதிர்க்க வேண்டும். போராட்டக்கார்களுக்குஎதிராகமக்கள் வீதிக்கிறங்க வேண்டும்.

அதேபோன்று மக்களின் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படும் வகையில் போராட்டம் மேற்கொள்பவர்களை அத்தியாவசிய சேவை சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்.

அத்துடன் அவர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாத வகையில் தடை செய்ய வேண்டும் நாட்டை அராஜக நிலைக்கு கொண்டு செல்லநடவடிக்கைஎடுத்தால் அதனை பாதுகாக்க அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுப்பதற்கும் பின் வாங்கப்போவதில்லை. - என்றார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தனது பதவியைக் கவிழ்க்க முடியாதாம்

## பிரதமர் தினேஷ் கூறுகின்றார்



பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும்உள்ளூராட்சிஅமைச்சில் எந்தப் பிரச்சினையும் இல்லை. உள்ளூராட்சிசபைத் தேர்தலைப்பிற்போடுவதற்கு எந்த அரச அதிகாரியையும் நான் தூண்டவில்லை. எதிரணியினரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றேன்.

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட அதிகாரிகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பிரதமர்தினேஷுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பில் எதிரணிகள் ஆலோசித்து வருவது தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எனக்கு எதிராக எந்தத் தரப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன்.

பெரும்பான்மை இல்லாத நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் எனது பிரதமர் பதவியையோ அல்லது அமைச்சுப் பதவியையோ கவிழ்க்க முடியாது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலைக் குழப்புவதோ - தேர்தலைப் பிற்போடுவதோ எனது நோக்கம் அல்ல. தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறும்.

நாட்டின் நிலைமை குறித்தும், மக்களின் நிலை தொடர்பிலும் அக்கறை இல்லாதவர்கள்வாய்க்குவந்த மாதிரி உளறுவார்கள். அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கக் கூடாது - என்றார்.

# தொழிற்சங்கப் போராட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## இடதுசாரி ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

ஆட்சியாளர்களின் முறையற்ற வரி கொள்ளை, அத்தியாவசியப்பொருள்களின் விலையேற்றம் உள்ளிட்ட பொது காரணிகளை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்படும் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்தினால்சமூகக்கட்டமைப்பில் போராட்டங்கள் மாத்திரமே மிகுதியாகும் என இடதுசாரி ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தொழிற்சங்கபோராட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மேலும் நெருக்கடிக்குள்ளாகும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் போராட்டங்கள் மாத்திரமே மிகுதியாகும்.

அரசாங்கத்தின் முறையற்ற வரி கொள்கை , அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் உள்ளிட்ட பொது காரணிகளை முன்னிலைப்படுத்தி தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிச்சையாக செயற்படுத்துவதை விடுத்து, தொழிற்சங்கத்தினருடன் இணக்கமாகச் செயற்பட வேண்டும்.

அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகளின் வரப்பிரசாதங்களை மட்டுப்படுத்துவதற்கான தீர்மானங்களுக்குமுழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரசியல்தொடர்பில்நாட்டு மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வழிமுறைகள் அனைத்தும் தற்போது முடக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறுவது சாத்தியமற்றதன்மையில் உள்ளது.

தேர்தல்செயற்பாடுகளை ஜனாதிபதி தந்திரமான முறையில் தடுத்துள்ளார். தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்றுஇடம்பெற்றால்அரசாங்கம் படுதோல்வி அடையும். - என்றார்.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.03.202இல் வெளியிடப்பெற்றது.

## நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 30 செவ்வாய்க்கிழமை 14.03.2023 கதிர் 377

## மாற்றுத் திறனாளிகளுக்கும் உரிமைகளை வழங்க திட்டம்


### வருகிறது புதிய சட்டம்

இலங்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ள மாற்றுத் திறனாளிகளை சர்வதேச நடைமுறைக்கு அமைவாக அவர்களுக்கும் குடி மக்களைப் போன்று அனைத்துஉரிமைகளையும் வழங்கி பாதுகாப்பதற்கான ஏற்பாடு களை உள்ளடக்கிய புதிய சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ளது என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர்

2☞

## பாடசாலைகளும் நாளை முடங்கும்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு



நாடளாவிய ரீதியில் நாளை முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கப் போராட் டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் முழுமையாக இணைந்துகொள்வதாக அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:-

அடக்குமுறைகளையும் வரிச்சுமைகளையும், விலைவாசி உயர்வுகளையும், கட்டணங்களின் அகரிப்புகளையும் எதிர்த்து நாடளாவிய ரீதியில் அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்துகின்ற ஜனநாயகப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து கொள்கின்றது.

அதிபர், ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகள் இன்னமும் தீர்க்கப்படாமை, பாடசாலை செல்வதற்கான போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, வங்கி கடன் வட்டி வீதங்களின் அதிகரிப்பு, மாணவர்களின் போசாக்கு குறைபாடு, கற்றல் உபகரணங்களின் விலை உயர்வு, பொதுப் பரீட்சை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணராமை, அதற்கான கொடுப்பனவுகளை அதிகரிக்காமை போன்ற கல்விப்புல பிரச்சினைகளையும் முன்வைத்து நாளை புதன்கிழமை நாடளாவிய போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக இணைந்து கொள்வதோடு அன்றைய நாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் செல்லாது தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது- என்றுள்ளது.

இதேவேளை, ஆசிரியர் சேவை சங்கமும் நாளைய போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

## மார்ச் 9 என அறிவிக்கப்பட்ட

# தேர்தல் நடக்காததை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் மனு

### தேசிய மக்கள் சக்தி தாக்கல்

மார்ச் 9ஆம் நாள் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படாமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி இன்று அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்தது.

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 9ஆம் நாள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தது. ஆனால் தேர்தலை நடத்துவதற்குத் தேவையை நிதியை திறைசேரி விடுவிக்க மறுத் ததை அடுத்து அந்தத் தேர்தலை ஒத்தி வைத்தது.

அப்படி திகதி குறிப்பிட்டு அறிவிக்கப்பட்ட தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மருத்துவர் நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிதி அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர், அரச அச்சகர், காவல் மா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், பிரதமர் உட்பட அமைச்சரவையின் 35 உறுப்பினர்களும், இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

## உள்ளூராட்சி சபைகளின் ஆயுள்; ஆளுநர்களுடன் கலந்துரையாடல்

### இன்று கொழும்பில் நடக்கிறது

உள்ளூராட்சி மன்றங்களின் புதிய பதவிக் காலம் தொடர்பில் அறிவிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன அறிவித்துள்ள நிலையில. ஆனைத்து ஆளுநர்களும் கலந்துரையாடலுக்காகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்ததாவது:

ஊள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய பதவிக் காலம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுமற்றும் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்படவுள்ளது. அதன் பின்னரேயே புதிய திகதி அறிவிக்கப்படவுள்ளது -என்றார்.

அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன, நாட்டின் ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்களையும் இன்றைய தினம் சந்தித்து கலந்துரையாடுகின்றார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடித்து பிரதமரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதற்கமைய எதிர்வரும் 19ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக் காலம் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில் உள்ளூ ராட்சி மன்றங்களின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாட மாகாண ஆளுநர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிகாலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளமையினால் உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மருத்துவர்கள் பணி நிறுத்தம் செய்தாலும்

## அவரச சிகிச்சைப் பிரிவு தொடர்ந்தும் இயங்கும்

(எஸ்.நிதர்ஷன்)




தொழிற்சங்க நடவடிக்கையில் வைத்தியர்கள் ஈடுபட்டாலும் அவசர சிகிச்சைப் பிரிவு தொடர்ந்தும் இயங்குமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் போதனா வைத்தியசாலை கிளையின் தலைவர் எஸ். மதிவாணண் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் சேவையில் ஈடுபட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

தொழிற் சங்க நடவடிக்கை தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலையில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது- அவர் இதனைத்தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல தரப்பினர்களும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரும் சில கோரிக்கைகளை முன்வைத்து தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக அரசின் நியாயமற்ற வரிக் கொள்கை, சம்பளக் குறைப்பு, மருந்துத் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டுமென வலியுறுத்தி கடந்த காலங்களில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தோம்.

2☞

## அமைச்சர் எச்சரிக்கை

அத்தியாவசிய சேவைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள சேவைத் துறைகளில் கடமை புரியும் அரச ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதினூடாக நாட்டின் சட்டத்தை மீறினால், அதற்கெதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன எச்சரிக்கை விடுத்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரமும் நாடு முழுவதும் வழமையான செயற்பாடுகள் முடக்கம் அடையும்என்று கூறப்பட்டது. பாடசாலை நடவடிக்கைகள் இடம்பெறாது, வைத்தியசாலைகளும் செயற்படாது, பேருந்துகள் நிறுத்தப்படும், தொடருந்துகளும் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

சமகால ஆட்சி நாட்டில் இடம்பெற்ற மின் துண்டிப்பை இல்லாமல் செய்தது. தற்பொழுது தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படுகின்றது. பல நாட்களாக தமது வாகனங்களுடன் எரிபொருளுக்காக நீண்ட

2☞

## தொடருந்து ஊழியர்களின் விடுமுறைகள் திடீர் ரத்து

### அமைச்சு அறிவிப்பு

அத்தியாவசியப் பொதுச் சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தொடருந்துத் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சு வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக் குகப்பட்டுள்ளதாவது,

பெப்ரவரி 27ஆம் திகதி வெளியிட்பட்ட அதி விசேட வர்த்தமானி இலக்கம் 2321/07இன்படி, தொடருந்து சேவை அத்தியாவசியசேவை-யாக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 1979ஆம் ஆண்டு 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின்

2☞

## அஞ்சல், ரயில், மின் துறைகளில் நாளை தொழிற்சங்க போராட்டம்




அரசின் புதிய வரி கொள்கைக்கு எதிராக இன்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அஞ்சல் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அத்துடன், நாளை காலை 9 மணி முதல் சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாக, இலங்கை மின்சார சபை தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

திட்டமிட்டபடி இன்று நள்ளிரவு முதல் ஒருநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகத் தொடருந்து தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

5 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக தொடருந்து தொழிற்சங்க கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தொடருந்து ஒழுங்குபடுத்தல் சேவையாளர்கள், தொடருந்து நிலைய அதிபர்கள், இயந்திர சாரதிகள், தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்தப் பணிப்புறக் கணிப்புக்கு ஆதரவளிக்கவுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அகில இலங்கை தாதியர்

2☞

## முன்னாள் பெண் போராளிக்கு உதவினாராம்; கான்ஸ்டபிள் கைது



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான பெண் ஒருவருக்கு, போலி ஆவணங்களுடன் வெளிநாடு செல்வதற்கு உதவினார் எனக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த குறித்த விடுதலைப் புலி கள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு வெள் ளவத்தையில் உள்ள முகவரி யில் போலி ஆவணங்களை உருவாக்கி வெளிநாடு செல்வதற்குச் சந்தேகநபரான கான்ஸ்டபிள்

2☞

## விடைத்தாள்களைத் திருத்த 6,000 ஆசிரியர்கள் போதாது

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக மேலும் 6000 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதிப்பீட்டுக் கடமைகளுக்காக இதுவரை சுமார் 13,000 விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்துள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 19000 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

முக்கியமாக விஞ்ஞானப் பாடப்பிரிவின்

2☞

## வடமராட்சி கிழக்கில் நேற்றுக் குழப்பம்



யாழ். மாவட்டம், வடமராட்சிகிழக்கு, நாகர்கோயிலில் திங்கட்கிழமை இரவு குழப்பங்களை அடக்கப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இளைஞர் குழு

2☞

## ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

ஊழல் எதிர்ப்பு சட்ட-மூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பபில் அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் எதிர்ப்புச் சட்ட-மூலத்தைத் தயாரிப்பதற்காக 2022 ஜுலை 18ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

அதற்கமைய,

2☞

## தொடருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2ஆம் பிரிவின் பிரகாரம் அத்தியாவசிய பாது சேவையாக பிரகடனப்படுத்தப்பட் ள்ள தொடருந்து சேவையின், அனைத்து ஊழியர்களினதும் விடுமுறையை இன்று தல் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்துவதற்கு தொடருந்துத் திணைக்களப் பொது முகாமையாளர் டவடிக்கை எடுத்துள்ளார்.

தொடரூந்து சேவையைத் தடை யின்றி, வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்ல நாளை பணிக்குச் சமூகமளிக்காத அனைத்து ஊழியர்களிடமும் அது தொடர்பான அறிக்கையை கோரு மாறு தொடருந்துப் பொது முகாமை யாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ்.குணசிங்க அனைத்துத் திணைக்கள தலைவர் களுக்கும் பணிபபுரை விடுத்துள்ளார் – ன்றுள்ளது.

## மாற்றுத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ந்துல குணவர்தன தெரிவித்தார். அரச கவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை டைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த ாவது:

2016ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளி களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. அதன் 4ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுளவாறு, மாற்றுத் தி றனாளிகளுக்கு எந்த வகையிலும் பாகுபாடு காட்டாமல் அவர்களின் அனைத்து உரிமை களையும் அடிப்படை சுதந்திரங்களையும் பாதுகாப்பதையும் ஊக்குவிப்பதையும் அனைத்து அரசும் உறுதிப்படுத்த வேண்டும். மேலும், இது தொடர்பான அடிப்படை வரைவைத் தயாரிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 1996ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தைத் திருத்தியமைத்து புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும், மேற்படி குழு முன்வைத்த பரிந்துரைகளின் அடிப்படை யில் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான சட்ட வரைவுக்கு ஆலோசனை வழங்கவும். பெண்கள் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அபிவிருத்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது–என்றார்.

## விடைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பீட்டு பணிகளுக்கே ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக விண்ணப் பங்களை அனுப்புவதற்கு மேலும் அவ காசம் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்புவ தற்கான கால அவகாசம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், தற்போதைய சூழலைக் கருத்தி ற்கொண்டு குறித்த கால அவகாசம் காலவரையறை யின்றி ஒத்திவைக்கப்பட் டுள்ளது – என்றார்.

## அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரிசைகளில் காத்திருந்து சிலர் இறந்த சம்பவங்களும் பதிவாகின. தற்போது எந்தவொரு எரிபொருள் வரிசையும் இன்றி எரிபொருட்களை மக்கள் பெற்றுக்கொள்கின் றனர்.

கடந்த காலங்களில் சிலிண்டர்களை சுமந்த வண்ணம் எரிவாயுவை தேடி மக்கள் அலைந்தனர். பெரும் சிரமத்திற்கு மத்தியில் ஜனாதிபதி இச்சவால்களை எதிர்கொண்டு அவற்றிற்கான தீர்வைக் கண்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப் பாளர் சபை எதிர்வரும் 20ஆம் திகதி கூடி நீண்டகால நிதி உதவியை எமக்கு வழங்க உள்ளது. இதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு அந்நிறுவனம் தயாராக உள்ளது. இதனை சீர்குலைப்பதற்கு இட மளிக்காமல் அரசினால் மக்களின் இயல்பு வாழ்க்கை, மாணவர்களின் கல்வி, நாட்டில் நாளாந்தம் கடமைகளில் ஈடுபடுவோர், கூலித் தொழிலை மேற்கொள்வோர், சுய முயற்சிகளில் ஈடுபடுவோர் உள்ளிட்டோரின் நலனுக்காக தற்போது நடவடிக்கைகள் மே ற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக அரச சேவையை முன்னெடுப்பதற்காக இவற்றை அத்தி யவசிய சேவையாக வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகம், போக்குவரத்து, தபால், மின்சாரம் உள்ளிட்ட அனைத்தும் அத்தி யவசிய சேவைகளாக பரிமாற்றம் செய்–யப்பட்டுள்ளன.

நாட்டில் சட்டத்தை சீர்குழைத்தால் அதற்காக மேற்கொள் ளப்படும் நடவ டிக்கைகள் குறித்து சட்டத்தை சீர்குழைத்த பின்னர் முன்னெடுக்கப்படும்.

சட்டத்தை முறையாக செயற்படத்த வேண்டும் என் பதை வர்த்தமானி அறிவிப் பில் முறையாக குறிப்பிடப்பட்டுள்ளது –என்றார்.

## வடமராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கும் பொலிஸாருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டைத்தொடர்ந்து குழப்பங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மயானம் தொடர்பாக இருகுழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடு தொடர்பில் விசாரிக்கச் சென்ற பொலிஸாருடன் ஒரு தரப்பு இளைஞர்கள் முரண்படத் தொடங்கியதில் குழப்பம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இருதரப்பையும் இன்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தி ற்கு அழைக்கப்பட்டிருந்தனர். நாகர்கோ–விலில் மயானம் ஒன்றின் சுற்று மதி லுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று நடைபெற இருந்தது. அந்த நிகழ்வுடன் தொடர்புடைய புலம்

பெயர்வாசி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை தாக்கப்பட்டு காயமடைந்தார். அவர் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்–யப்பட்டது. அது தொடர்பில் நாகர்கோவில் பகுதிக்கு திங்கள்கிழமை மாலை பொலிஸார் விசாரணைக்குச் சென்றனர்.

விசாரணையின்போது அங்கிருந்த இளைஞர்கள் சிலர் பொலிஸாருடன் முரண்பட்டனர். முரண்பாடு இறுதியில் கைகலப்பாக மாறும் நிலையை எட்டிய–யபோது. பொலிஸார் துப்பாக்கியால் சுட்டனர் என்று நேரில் பார்த்த மக்கள் தெரிவித்தனர்.

பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத் திய பின்பே நிலமை கட்டுப்பாட்டுக்களு வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், தாம் அங்கு துப்பாக்கி சூடு நடத்தவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலல் வெற்றுத் துப்பாக்கி தோட்டாக்களை நேரில் பார்த்ததாக பலர் சாட்சியமளித்தனர். குழப்பத்தில் அந்தப் பகுதியிலுள்ள ஆலய சப்பைரத கொட்டில் ஒன்றும் எரிக்கப்பட்டுள்ளது

## அவசர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு ஆட்சியாளர்கள் உரிய நடவடிக் கைகளை எடுக்காததால் தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடங்கியுள்ளோம். இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் பொது மக்கள் பாதிக்கப்படாத வகையில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

ஏனைய சேவைகளில் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு எமது மன வருத்தத்தை தெரிவித்து கொள்கிறோம். மேலும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்து–வது எமது நோக்கமும் அல்ல. அதனால் முடிந்தவரை சேவையை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

நாளையதினம் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையில் நாமும் இணைந்து கொள்கிறோம் – என்றார்.

## ஊழல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அரச வர்த்த மானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப் பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது – என்றார்.

## அஞ்சல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


சங்கம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு, அகில இலங்கை பொதுத் துறைமுக ஊழியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், அரச மற்றும் அரச ஆதரவு தொழிற்சங்கக் கூட்டு, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்க ளின் தொழிற்சங்கக் கூட்ட மைப் பும் இந்த வாரம் எதிர்ப் புகள் மற்றும் வேலை நிறுத் தங்களைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திங்கட்கிழமை முதல் துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் ஆரம் பித்துள்ள 48 மணி நேர சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந் தும் முன் னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நேற்று தொழிற்சங்க நட வடிக்கை முன்னெடுக்கப்பட்ட 4 மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய 5 மாகாணங்களில் இன்று தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்றைய தினத்துக்குள் தீர்வு வழங்கப்படாவிட்டால் நாளைய தினம் சகல மாகாணங்களில் தொழிற்சங்க நடவ டிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத் தியர் வாசன் ரட்ணசிங்கம் அறிவித் துள்ளார்.

## மனைவியை கத்தியால் குத்திய வேட்பாளர்



கொழும்பு சொய்ஸா வைத்தியசாலை யில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் கணவரால் கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என கம் பஹா நுங்கமுவ பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

படுகாயமடைந்த வைத்தியர் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வைத்தியரை கத்தியால் வெட்டி காயப்படுத்திய கணவர் கம்பஹா மாவட் டத்தில் உள்ளூராட்சி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## முன்னாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடந்தையாக இருந்தார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த நிலையில், வெளிநாடு சென்ற பெண், நாடு திரும்பிய போது கைது செய்–யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பெறப்பட்ட தகவல் களைக் கொண்டு கான்ஸ்டபிள் கைது செய்யப் பட்டார்.

சந்தேகநபரான கான்ஸ்டபிள் கொழும்பு – வாழைத்தோட் டம் பொலிஸ் நிலையத்தில் கட மையாற்றியவர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



# குற்றமிழைப்பவர் சொத்துகள் அரசுடைமை ஆக்கப்படும்!

## வஜிர அபேவர்தன திட்டவட்டம்



அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் கீழ் (1979 ஆம் ஆண்டு இலக்கம் 61) குற்றமிழைக்கும் ஒவ்வொரு நபரின் அசையும் அல்லது அசையா சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அத்தியாவசியப் பொதுச் சேவைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமிழைத்து, நீதிமன்ற வழக்கு விசாரணையின் மூலம் குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளிக்கு, இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அல்லது 2000 ரூபாவிற்கு குறையாத 5000 ரூபாவை விட அதிகரிக்காத தண்டப்பணம் அல்லது இவ்விரு தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு அத்தியாவசிய பொது சேவை சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் உறுப்புரையில் மேற்படி குற்றத்தை செய்பவர் பணிபுரியும் உரிமையை இழக்க நேரிடும் எனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிட்டவொரு நபர் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், குறித்த நபர் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கத்தால் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் அவர் கலந்துகொண்டாரெனில், அவரால் குற்றமிழைக்கவில்லை எனக் கூறும் காரணத்தை நியாயமானதென ஏற்றுக்கொள்ள முடியாது.

எழுதப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை எதுவாக இருந்தாலும், இந்தச் சட்டத்தின் விதிகளே மேலோங்கிக் காணப்படும். அதற்கேற்ப, இந்தச் சட்டத்தின் விதிகளுக்கும் பிற எழுதப்பட்ட சட்டத்தின் விதிகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால், இந்தச் சட்டத்தின் விதிகளே ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் 6 மற்றும் 7 ஆம் உறுப்புரைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

துறைமுகம், விமான நிலையம் மற்றும் பொதுப் போக்குவரத்துசேவைகள் உள்ளிட்டவற்றை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திடப்பட்டுள்ளது. நியாயமற்ற தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் சக்தியை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட்டு எந்தவொரு துறைமுகத்திலும் உள்ள கப்பல்களிலிருந்து பயணிகள் அல்லது பொருள்களைத் தரையிறக்குதல், ஏற்றுதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் உணவு, பானங்கள், நிலக்கரி, எரிபொருள், எண்ணெய் போன்றவற்றை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

சுங்க கட்டளை சட்டத்தின் நோக்கங்களுக்காக வரையறுக்கப்பட்ட, வீதிகள், பாலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் ரயில் நிலையங்கள் உள்ளிட்டவை, ரயில் அல்லது விமானம் மூலம் போக்குவரத்து சேவைகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அத்தியாவசிய சேவைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. – என்றார்.



# இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைக்கும்

## அந்நாட்டு தூதுவர் திட்டவட்டம்

இலங்கையுடனான 75 ஆண்டு கால இராஜதந்திர நட்புறவை தொடர்ந்தும் பேணுவதே எமது எதிர்பார்ப்பாகும். சகல நெருக்கடிகளிலிருந்தும் மீள்வதற்கு உலக உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு வழி களினூடாக இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் அதன் ஒத்துழைப்புக்களை வழங்கும் என்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவுத் திட்ட முன்னெடுப்புகளை பார்வையிடுவதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் கொழும்பு-15 இல் அமைந்துள்ள புனித ஜோன் மகா வித்தியாலயத்துக்கு நேற்று (திங்கட்கிழமை) விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

முன்னேற்றத்தை நோக்கியே நீங்கள் பாடசாலைக்கு வருகை தருகின்றீர்கள். பசியுடன் இருந்தால் உங்களால் அந்த முன்னேற்றத்தை அடைய முடியாது.

எனவே, இலங்கையில் 17 லட்சம் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று 30 லட்சம் கர்ப்பிணிகள் மற்றும் தாய்மாரும் இந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக நிதி உதவிகள், உரம் உள்ளிட்டவற்றை வழங்கியுள்ளோம். அமெரிக்கா எதற் காக இவ்வாறான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றது என்ற கேள்வி எழக்கூடும். இவ்வாண்டு இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படுகிறது.

அத்தோடு இலங்கை அதன் 75 ஆவது சுதந்திர தினத்தையும் கொண்டாடுகிறது. இந்த நட்புறவை தொடர்வதே எமது எதிர்பார்ப்பாகும்.

இளம் தலைமுறையினரான நீங்கள் முன்னேற்றமடைய வளர்ச்சியடைந்த நாடு அவசியம் என்று நம்புகின்றோம்.

இன்று நீங்கள் கல்வி கற்பதற்காக எத்தனை பெற்றோர்கள், மூதாதையர்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர் என்பதை நினைவுகூர வேண்டும். நாம் தொடர்ச்சியாக இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவோம். உலக உணவுத்திட்டம் உள்ளிட்ட ஏனைய பல்வேறு வழிகளுக்கூடாகவும் நாம் எமது ஒத்துழைப்புக்களை வழங்குவோம். – என்றார்.

# அத்தியாவசிய மருந்துகளின் விலைகளைக் குறைக்கலாம்

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



சுகாதாரத்துறை தொடர்பில் வெளியாகும் செய்திகள் சில அடிப்படையற்றவையாகும். நாட்டின் பிரதான நிலை ஊடகங்கள் என்ற வகையில் சுகாதாரத்துறை தொடர்பில் பொய்யான செய்திகளை வெளியிட்டுள்ளமை எமக்குக் கவலையளிக்கிறது.

மேலும் முதல் காலாண்டுக்குள் அத்தியாவசிய மருந்துப் பொருள்களின் விலைகளை குறைக்க எதிர்பார்த்துள்ளோம் என சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில் –

மருந்து தட்டுப்பாடு தாடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை.

நாட்டின் பிரதான நிலை ஊடகங்கள் சுகாதாரத்துறை தொடர்பில் பொய்யான செய்திகளை வெளியிட்டுள்ளமை கவலைக்குரியது.

மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நிதி நிறுவனம் ஒன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஊடாக சுகாதாரத்துறை அமைச்சுக்கு 50 கோடி டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளமை முற்றிலும் அடிப்படையற்றதாகும்.

குறித்த நிதி நிறுவனம் 50 கோடி டொலரை வழங்க கொள்கை ரீதியில் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் 10 கோடி டொலர்களை மாத்திரமே வழங்கியுள்ளது.

அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் பின்னணயில் புற்று நாய் உள்ளிட்ட கொடிய நோய்களுக்கான மருந்துகளை அதிக விலைக்கு விற்பனை செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள செய்தியும் அடிப்படையற்றதாகும். அவை உண்மைக்குப் புறம்பானவையாகும்.

மருந்து இறக்குமதிக்கான விலைமனுகோரலுக்கு நிதி ஒதுக்கீடு தொடர்பில் திறைசேரியின் செயலாளர் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. விலைமனுக்கோரல் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெறுகின்றது. மருந்து தட்டுப்பாடு மற் றும் விலை தொடர்பில் சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும், திறைசேரியின் அதிகாரிகளுக்கும் இடையில் விசேட பேச்சு இடம்பெறவுள்ளது. மேலும் முதல் காலாண்டில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களின் விலைகளை குறைக்க எதிர்பார்த்துள்ளோம். – என்றார்.



# மனித உரிமை, பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுக்கள் அரசியல் உள்நோக்கத்துடன் செயலாற்றுகின்றனவாம்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாய்ச்சல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழு ஆகியன அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்றன.

நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொழிற்சங்க போராட்டத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு ஏன் மனித உரிமைகள் மீறலாகக் கருதவில்லை என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மினுவாங்கொட பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எமது அரசாங்கம் வழங்கிய ஒரு சில நியமனங்கள் இன்று அரசாங்கத்துக்கு எதிராகக் காணப்படுகின்றன. விசேடமாக இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை குறிப்பிட வேண்டும். இவர் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் முறையாக செயற்பட்டிருந்தால் கடந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் மின் விநியோகக் கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டிருக்காது.

பிரச்சினைகளைத் தீவிரப்படுத்தி ஆணைக்குழுவுக்கும், அமைச்சுக்கும் இடையில் பிரச்சினைகளைத் தோற்றுவித்தார். எதிர்காலத்தில் இவர் ஏதாவதொரு அரசியல் கட்சியின் உறுப்பினராகப் பதவி வகிப்பார்.

மறுபுறம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அரசியல் நோக்கத்துடன் செயற்படுகிறது. உயர்தர பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட போது அதனை மனித உரிமைகள் மீறலாகக் கருதி பேச்சுவார்த்தையை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு தற்போது அமைதியாக இருப்பது வேடிக்கையாக உள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்துவிலகுவதாக குறிப்பிட்டுக் கொண்டு இலங்கை ஆசிரியர் சங் கம் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

இதனை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏன் மனித உரிமை மீறல் செயற்பாடாகக் கருதவில்லை. நாட்டுமக்களின் இயல்புவாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொழிற்சங்கப் போராட்டத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏன் மனித உரிமைகள் மீறலாகக் கருதவில்லை. – என்றார்.

# தொற்றாநோய் குறித்த மருத்துவ முகாமிற்காக உலக வங்கியிடமிருந்து 65 மில்லியன் டொலர்!

## சுகாதார மேம்பாட்டு பணியகம் தகவல்

*ஆணைமடு பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் 9,000 மக்களுக்கு தொற்றா நோய் தொடர்பான விசேட மருத்துவ முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.*

*அதற்கமைய ஆரம்ப சுகாதார சேவைகளுக்காக இவ்வாண்டு உலக வங்கியிடமிருந்து 65 மில்லியன் டொலர் கிடைக்கப்பெறவுள்ளதாக சுகாதார பராமரிப்பு முறையை வலுப்படுத்துவது தொடர்பான உலக வங்கியின் பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -*

*ஆணைமடு வைத்தியசாலையை அண்மித்த 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்காக தொற்றா நோய் ஏற்பட்டுள்ளவர்களை இனங்காண்பதற்காக விசேட மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி ஆணைமடு பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் இந்த மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. ஆணைமடு வைத்தியசாலையை அண்மித்து 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 29,000 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 35 வயதிற்கும் அதிகமானோர் 12,400 பேர் காணப்படுகின்றனர்.*

*35 வயதுக்கு குறைவானவர்களில் 3,000 பேர் இதுவரையில் வைத்தியசாலையால் வெவ்வேறு மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களது சுகாதார நிலைமை பரிசோதிக்கப்பட்டு தனிப்பட்ட மருத்துவ அறிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.*

*எவ்வாறிருப்பினும் இதுவரையிலும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத 35 வயதுக்கும் அதிகமான 9,000 பேருக்காக இந்த விசேட மருத்துவ முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*சுகாதார அமைச்சின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறையை வலுவூட்டும் உலக வங்கியின் திட்டமானது புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் ஆணைமடு வைத்தியசாலை ஆகியவற்றுடன் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. இது எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.*

*ஆரம்ப சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான உலக வங்கி திட்டமானது வைத்தியசாலைகள் மற்றும் கிளினிக்குகள் மட்டத்தில் இத்தகைய மருத்துவ சோதனைகளை மேற்கொண்டு 198,000 நபர்களின் தகவல்களை டிஜிற்ற் தகவல் கட்டமைப்பில் சேர்க்க முடிந்துள்ளது. திட்டத்தில் பங்கேற்கும் சுமார் 600 வைத்தியசாலைகளில் சேவைகளைப் பெற ஒதுக்கப்பட்ட மக்கள் தொகையில் 25 சதவீதமானோர் ஒரு வைத்தியசாலையில் பரிசோதனையை நிறைவு செய்ய வேண்டும்.*

*மேலும், வைத்தியசாலையுடன் இணைந்த சுகாதாரப் பாதுகாப்புக் குழுக்கள் 3 கட்டங்களை நிறைவு செய்ய வேண்டும். அதற்காக இவ்வாண்டு உலக வங்கியிடமிருந்து 65 மில்லியன் டொலரைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாக ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறையை வலுப்படுத்துவது தொடர்பான உலக வங்கியின் பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.*

# சாய்ந்தமருது கடற்கரையில் மிதிவெடி மீட்பு!



கடற்கரைப் பகுதியில் மண்ணில் புதையுண்ட நிலையில் மிதிவெடி ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.

குறித்த மிதிவெடி இனங்காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை இனங்காணப்பட்ட குறித்த மிதிவெடி பழையதா அல்லது வேறு இடம் ஒன்றில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளதா என்ற விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் வழங்கிய தகவலுக்கமைய குறித்த மிதிவெடி மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிர்ப்பந்தத்தால் நிறைவேற்றி பயனில்லை

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தனஇன்று அறிவித்தார்.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பன்னாட்டுச் செலாவணி நிதியம் (ஐஎம்எவ்) நிபந்தனைகளில் ஒன்று இந்த ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக செலாவணி நிதியத்திடமிருந்து 2.9 மில்லியன் கடனைப் பெறவேண்டுமானால் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டியது கட்டாயம்.

பங்குனி 20 செலாவணி நிதியத்தின் பணிப்பாளர்கள் கூட்டத்தில் இலங்கையின் கடன் தொடர்பான இறுதி முடிவு, அனேகமாக கடன் வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைக்கும் என்கிற நிலையில் இந்தச் சட்டத்திற்கான வரைவுக்கு அமைச்சரவை அனுமதியளித்திருக்கின்றது.

இலங்கையில் ஆட்சியின் உச்சியிலிருந்து அடிமட்டம் வரையில் ஊழல், லஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. அதன் கேவலமான நிலை என்னவென்றால், தேநீரையும் பணிசையும்கூட லஞ்சமாகப் பெறுவது என்கிற அளவிற்கு அது தரம் தாழ்ந்திருக்கிறது.

அண்மையில் கொழும்பில் முச்சக்கர வண்டி ஒன்றை மறித்த காவல்துறையினர் ஆவணங்களைக் கேட்டுப் பரிசோதித்திருக்கின்றனர். முக்கியத்துவம் குறைந்த ஆவணம் ஒன்றைச் சாரதி கைவசம் வைத்திருக்கவில்லை. அதற்காக தண்டப்பணம் கட்டவேண்டும் என்ற நிலையில், அவரை ஒரு தேநீரும் பணிசும் வாங்கித் தந்துவிட்டுச் செல்லுமாறு பணித்துள்ளனர். சாரதி வீதிக்கு மறுபுறம் இருந்த கடையில் அவற்றை வாங்கச் சென்றுவிட்டபோது முச்சக்கர வண்டிக்குள் இருந்தவர் சாரதியை நீண்ட நேரம் காணவில்லையே என்று வெளியே வந்திருக்கிறார். அவர் ஒரு சட்டத்தரணி. தேநீர் லஞ்சம் கேட்ட காவல்துறையினருக்கும் அவரைத் தெரிந்திருக்கிறது.

இறங்கி வந்த சட்டத்தரணி சாரதி எங்கே என்று அந்தக் காவல்துறையினரிடமே கேட்டுக் கொண்டிருக்க கையில் தேநீரும் பணிசுமாக சாரதி வீதியைக் கடந்து வந்துகொண்டிருந்தார். மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் மாட்டிக்கொண்ட காவல்துறையினர், இதோ சாரதியை இப்போது அனுப்பி வைக்கிறோம் என்று கூறிக்கொண்டு ஒருவாறு தேநீரை தமது வாகனத்தில் வைக்கச் சொல்லிவிட்டு சாரதியை அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவம் அடிமட்டத்தில் மிகக் கேவலமாக லஞ்சம் ஊழல் எந்தளவிற்குத் தலைவிரித்தாடுகின்றது என்பதற்கு உதாரணம். ராஜபக்சக்கள் ஆட்சியில், பஸில் ராஜபக்சவுக்கு மிஸ்டர் 10 பேர்சன்ட் என்கிற பெயரே அரசியல் வட்டாரங்களில் புகழ்பெற்றிருந்த காலம் ஒன்றிருந்தது. இது போன்று அரசின் தலைமுதல் அடி வரை ஊழல் புற்றுநோயாகப் பரவியுள்ளது. அது அகற்றப்படவேண்டும்.

ஆனால், அதனை செலாவணி நிதியத்தின் நிர்ப்பந்தத்துக்காக ஒரு சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்திவிட முடியுமா என்பதுதான் மிகப் பெரிய கேள்வி. நிர்ப்பந்தத்திற்காக இலங்கை ஆட்சியாளர்கள் தலையாட்டிய எந்தவொரு விடயத்தையும் அவர்கள் நிறைவேற்றியதாக சரித்திரம் இல்லை. இந்தியாவின் நிர்ப்பந்தத்தினால் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மேற்கு நாடுகளின் நிர்ப்பந்தத்தால் ஏற்றுக்கொண்ட தீர்மானங்கள் என்று இந்தப் பட்டியல் மிக நீண்டது.

அந்த வரிசையில் ஊழல் தடுப்புச் சட்டமும் சேர்ந்து கொள்ளாத வரைக்கும் அது பயனுள்ள ஒன்றுதான்

# தேர்தல் நடவடிக்கைகளுக்கு எரிபொருள் வழங்க முடியாது!

## சாக்குப்போக்கு சொல்கிறார் காஞ்சன

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழுவுக்கும், வேட்பாளர் களுக்கும் எரிபொருளை விநியோகிக்க முடியாது. மேலதிகமாக எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நிதியை திரட்டிக் கொண்டு எரிபொருளை இறக்குமதி செய்ய குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதங்களேனும் செல்லும்.

ஆகவே விரைவாக எரிபொருள் விநியோகிக்க முடியாது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளோம் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மினுவாங்கொடை பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

தேர்தல் நடவடிக்கைகளைமேற்கொள்ள ஆணைக்குழுவுக்கு எரிபொருளை விநியோகிக்க வலுசக்தி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை அடிப்படையற்றவை.

அரசாங்க தரப்பு வேட்பாளர்கள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடாமல் உள்ளார்கள்.

ஆனால் கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட போது கறுப்புச் சந்தை ஊடாக எரிபொருளை பதுக்கி வைத்த மக்கள் விடுதலை முன்னணியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் தற்போது அதனை பயன்படுத்தி முழு நாட்டையும் வலம் வருகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட 80 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் தயாராக உள்ளார்கள், எரிபொருள் கோட்டாவை அதிகரிக்க வேண்டுமாயின் அனைவருக்கும் கோட்டாவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும், தற்போதைய நிலையில் மருத்துவ சேவைக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்க முடியாது.

வேட்பாளர்களுக்கு ஒரு வாரத்துக்கு மாத்திரம் 5 லீற்றர் எரிபொருள் வழங்கப் படுகிறது, ஆனால் இவர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட ஒரு நாளைக்கு 5 லீற்றர் எரிபொருளை விநியோகிக்குமாறு கேட்கிறார்கள். 5 லீற்றர் எரிபொருள் போதாது என்பதை ஏற்றுக்கொள்கிறோம், ஆனால் தற்போது எவருக்கும் எரிபொருள் கோட்டாவை அதிகரித்துக் கொடுக்க முடியாது.

எரிபொருள் இறக்குமதிக்கான டொலரைத் திரட்டிக் கொண்டு எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு குறைந்த பட்சம் ஆறு மாதங்களேனும் செல்லும் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறி



வித்துள்ளோம். எரிபொருள் விநியோகம் முழுமையாக வழமைக்கு திரும்பவில்லை என்பதை அனைவரும் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மாதாந்த எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைய எதிர்வரும் மாதம் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

எரிபொருள் விலை குறைவடையும் போது அதன் பயனை மக்களுக்கு நிச்சயம் வழங்குவோம். மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும். – என்றார்.

# மின்சார சபையை 9 கட்டங்களாக வேறுபடுத்துவதற்கு அரசு முயற்சி!

## மின்சாரத்துறை சேவை சங்கம் குற்றச்சாட்டு

இலங்கை மின்சார சபையை 9 கட்டங்களாக பிரித்து, வெளிநாட்டு

நிறுவனங்களுக்கு உரித்துரிமையை வழங்கும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

மறுசீரமைப்பு தொடர்பில் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிடும் விடயங்கள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என மின்சாரத்துறை ஒன்றிணைந்த சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

மின்சாரத்துறை அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வி, ஆகவே நாளை (புதன்கிழமை) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்தார்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பில் மின்சாரத்துறை அமைச்சில் இடம்பெற்ற பேச்சு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை மின்சாரத்துறை அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

மின்சாரத்துறையை தனியார் மயப்படுத்த வேண்டுமாயின் அதற்கு நாட்டு மக்கள் அனுமதி வழங்க வேண்டும். மக்களாணையை பெற வேண்டுமாயின் அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும்.

மின்சார சபையை தனியார் மயப்படுத்தப் போவதில்லை என மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிடும் கருத்துக்கள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது.

ஏனெனில் அவர் நாடாளுமன்றத்தில் ஒன்றை குறிப்பிடுகிறார். நாட்டு மக்கள் மத்தியில் பிறிதொன்றை குறிப்பிடுகிறார். எம்மிடம் முற்றிலும் மாறுபட்ட கருத்தைக் குறிப்பிடுகிறார்.

இலங்கை மின்சார சபையை 09 கட்டங்களாக வேறுப்படுத்தி, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு உரித்துரிமையை வழங்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

இலங்கை மின்சார சபையின் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆகவே, இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்த இடமளிக்க முடியாது. மின்சாரத்துறை அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சு தோல்வி. ஆகவே புதன்கிழமை நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம். – என்றார்.

# கைவிடப்பட்ட சிசுக்களை பொறுப்பேற்க நிலையம்

## அமைச்சரவை பத்திரம் விரைவில்!

குழந்தை பெற்றுக் கொள்ளும் பெற்றோர் அதனை தம்மால் வளர்க்க முடியாது என்ற நிலைமை ஏற்படும் போது குழந்தைகளைக் கைவிட்டுச் செல்கின்றனர்.

எனவே இவ்வாறான குழந்தைகளைப் பொறுப்பேற்பதற்காக 'கைவிடப்பட்ட சிசுக்களை பொறுப்பேற்பதற்கான நிலையம்' என்பதை ஸ்தாபிப்பதற்காக யோசனை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார். கடந்த வாரம் சிறுவர்கள் மீதான வன்முறை சம்பவங்கள் பல நாட்டில் பதிவாகியிருந்த நிலையில், அவை தொடர்பான விசேட ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

மேற்குலக நாடுகளிலுள்ள வைத்தியசாலைகளில் நீதிமன்றமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். குழந்தைகளைப் பெறுவோர் தம்மால் அதனை வளர்க்க முடியாது எனக் கருதும் பட்சத்தில் அந்த நீதிமன்றத்தின் ஊடாக எவ்வித தகவலும் வெளியிடப்படாமல் குழந்தைகளை வைத்தியசாலையில் ஒப்படைக்க முடியும். அவ்வாறானதொரு முறைமையை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை பத்திரமொன்று இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் அது தொடர்பில் இது–வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கபடவில்லை. குறித்த அமைச்சரவை பத்திரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

கடந்த 2021 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையால் இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடலை முன்னெடுத்து, 'கைவிடப்பட்ட சிசுக்களை பொறுப்பேற்பதற்கான நிலையம்' என்பதை ஸ்தாபிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

தாய் அல்லது தந்தையின் தனிப்பட்ட அடையாளத்தை வெளிப்படுத்தாது மாகாண மட்டத்தில் மாகாண வைத்தியசாலைகளை அண்மித்து இவற்றை ஸ்தாபிப்பதற்கு இதன் மூலம் திட்டமிடப்பட்டது. இந்த யோசனை அமைச்சரவை அங்கீகாரத்துக்காக 2022 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் அமைச்சரவையுடன் தொடர்புடைய சட்ட அதிகாரியால் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. இந்த விடயம் நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரித்துடையது என்பதால், அதன் ஊடாக இந்த யோசனையை அமைச்சரவைக்கு முன்வைப்பது உகந்து எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான பொறுப்பு வேறு நிறுவனங்களுக்கு காணப்பட்டாலும், அரசாங்கத்துக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் எம்மால் இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அண்மையில் கோட்டை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலின் கழிப்பறையில் குழந்தையொன்று கைவிடப்பட்டு சென்றமை தொடர்பான சம்பவங்கள் இடம்பெறும்போது, அவ்வாறான குழந்தைகளைப் பொறுப்பேற்பதற்கென பல இடங்கள் காணப்படுகின்றன.

அதற்கமைய மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் ஊடாக இந்த யோசனையை மீள சமர்ப்பிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

# சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரச்சினையை இரத்து செய்க!

## வீரசுமன வீரசிங்க வலியுறுத்து

உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என ஆளும் தரப்பினர் முன்வைத்த சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரச்சினையை இரத்துச் செய்யுமாறு சபாநாயகரிடம் கூட்டாக வலியுறுத்தவுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவால் நாடாளுமன்றம் பலப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் சட்டவாக்கத்தை பல வீனப்படுத்துவதை உயர்நீதிமன்றம் தடுத்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் தடையுத்தரவால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பு உறுப்பினர்களான பிரேம்நாத் சி.தொலவத்தே, செஹான் சேமசிங்க முன்வைத்துள்ள சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரச்சினை முற்றிலும் வெறுக்கத்தக்கது.

சிறப்புரிமை மீறல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் தொடர்பான குழு ஒரு தீர்மானத்தை எடுக்கும் வரை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேற்படி சிறப்புரிமை தொடர்பான பிரச்சினையை சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் தொடர்பான குழுவிற்கு சமர்ப்பிக்காமல், இரத்துச் செய்யுமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தவுள்ளோம். நீதிமன்றத்தின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தும் செயற்பாடுகளை ஆளும் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சபாநாயகர் நாடு திரும்பியதும் சகல எதிர்க் கட்சி தலைவர்களையும் ஒன்றிணைத்து அவருடன் முக்கிய பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைக்கான நிதி விடுவிப்பு பிரேரணையைக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளோம். – என்றார்.

# வங்கி தோல்விக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை

## அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவிப்பு



வங்கித் தோல்விக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான சிலிக்கான் வேலி வங்கி (எஸ்விபி) சமீபத்தில் முறிந்துபோனதாக அறிவிக்கப்பட்டது. இதனால் அமெரிக்க பங்குச் சந்தையில் வங்கிகளின் பங்கு மதிப்பு கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. இந்நிலையில், நியூயார்க் நகரை தலைமையிடமாகக் கொண்ட சிக்நேச்சர் வங்கியும் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியதால் இதன் பங்கு விலையும் கடுமையாகச் சரிந்தது. இதனால் இந்த வங்கி திங்கட்கிழமை மூடப்பட்டது.

இதையடுத்து, முறிந்துபோன வங்கி வாடிக்கையாளர்களின் பணத்தை மீட்க அமெரிக்க நிதி அமைப்புகள் பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளன. மேலும் மற்ற வங்கிகளின் வாடிக்கையாளர்கள் நலன் பாதுகாக்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தத் தொடர் நிகழ்வு அமெரிக்க வங்கி வாடிக்கையாளர்களை அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது.

வங்கி தோல்விக்கு காரணமானவர்கள் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அமெரிக்காவை பொறுத்தவரை அதன் வங்கிகள் பாதுகாப்பாகவே உள்ளன. எனினும் பெரிய வங்கிகளின் மேற்பார்வை மற் றும் ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் வரும் நாட்களில் நிச்சயம் மேம்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகளால் இனி இந்த நிலை ஏற்படாது என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்று தெரிவித்தார் அதிபர் ஜோ பைடன்.

அப்போது செய்தியாளர் ஒருவர். ஏன் இந்த நிகழ்வு நடந்தது...? அமெரிக்கர்களுக்கு இனி இவ்வாறு நடக்காது என்று உறுதியளிக்க முடியுமா? என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்காமல் ஜோ பைடன் புறக்கணித்துவிட்டார். வங்கிகள் முறிந்த விவகாரம் ஜோ பைடன் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் மேலும் ஒரு வங்கி நிதி நெருக்கடியால் மூடப்பட்டுள்ளது. இதனிடையே, வாடிக்கையாளர் முதலீட்டை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தநாட்டு மத்திய வங்கியும் வைப்பு நிதி காப்பீட்டுக் கழகமும் உறுதி அளித்துள்ளன.

அமெரிக்காவின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான சிலிக்கான் வேலி வங்கி (எஸ்விபி) சமீபத்தில் முறிந்ததுபோனது. இதனால் அமெரிக்கப் பங்குச் சந்தையில் வங்கிகளின் பங்கு மதிப்பு கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. இந்நிலையில், நியூயார்க் நகரை தலைமையிடமாகக் கொண்ட சிக்நேச்சர் வங்கியும் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியதால் இதன் பங்கு விலையும் கடுமையாக சரிந்தது. இதனால் இந்த வங்கி திங்கட்கிழமை மூடப்பட்டது.

இதையடுத்து, முறிந்துபோன வங்கி வாடிக்கையாளர்களின் பணத்தை மீட்க அமெரிக்க நிதி அமைப்புகள் பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளன. மேலும் மற்ற வங்கிகளின் வாடிக்கையாளர்கள் நலன் பாதுகாக்கப்படும் எனவும் உறுதி அளித்துள்ளன.

அமெரிக்க மத்திய வங்கி (பெடரல் ரிசர்வ்), மத்திய வைப்பு நிதி காப்பீட்டுக் கழகம் மற்றும் நிதித் துறை ஆகியவை கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சமீபத்தில் முறிந்துபோன எஸ்விபி வாடிக்கையாளர்கள் முதலீட்டை திருப்பி எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படும். இப்போது மூடப்பட்டுள்ள சிக்நேச்சர் வங்கி வாடிக்கையாளர்கள் தங்கள் முதலீட்டை திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுதவிர மற்ற வங்கிகளின் வாடிக்கையாளர்கள் தங்கள் முதலீட்டை எடுக்க விரும்பினால், அதை வழங்க ஏதுவாக சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் கூடுதல் நிதி வழங்கப்படும். வங்கிகள் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

2008ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு வங்கி துறையைப் பாதுகாக்க பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வங்கித் துறை நெருக்கடியை சமாளிக்கும் திறனைப் பெற்றுள்ளன – இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது



# போராட்டக்காரர்கள் 22000 பேருக்கு ஈரானில் பொதுமன்னிப்பு அறிவிப்பு

ஈரான் அரசின் ஆடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டுள்ள 22, 000 பேருக்கு அந்த நாட்டின் தலைமை மதகுரு அயதுல்லாக மேனி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

இது குறித்து ஈரான் நீதித் துறை தலைவா குலாம்ஹுசைன் முசேனி இஜேஹியை மேற்கோள் காட்டி அரசுக்குச் சொந்தமான இர்னா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

இன்னும் ஒரு வாரத்தில் ரமலான் மாதம் தொடங்குவதையொட்டி, சிறையில் அடைக்கப்பட்டுள்ள 82,656 கைதிகளுக்கு தலைமை மதகுரு ஆயத்துல்லா கமேனி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

அவர்களில், அண்மைக் காலமாக அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டுள்ள சுமார் 22,000 பேரும் அடங்குவர்.

தற்போது பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ள கைதிகள் அனைவரும் திருட்டு மற்றும் வன்முறைக் குற்றங்களில் ஈடுபடாதவாகள் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரானில் 1979ஆம் ஆண்டு நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு, அந்த நாட்டு பெண்களும் ஆண்களும் மத அடிப்படையிலான ஆடைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைக் கடுமையாகக் கடைபிடிக்கவேண்டும் என்று அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனா.

பொது இடங்களில் பெண்கள் தலையை மறைக்கும் ஹிஜாப் அணிந்திருப்பதைக் கட்டாயமாக்கும் சட்டம் 1983ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

இந்தச் சூழலில், மாா அமீனி என்ற 22 வயது குர்து இனப் பெண் ஹிஜாப் அணியவில்லை என்று கூறி, அவரை கலாசார காவலாகள் டெஹ்ரானில் கடந்த ஆண்டு செப்டம்பா மாதம் கைது செய்தனா. காவலில் இருந்த போதே மாா அமீனி உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து டெஹ்ரானில் தொடங்கிய போராட்டம், நாடு முழுவதும் பரவி தீவிரமடைந்தது. மாா அமீனி இறப்புக்குக் காரணமான ஆடைக் கட்டுப்பாட்டு சட்டத்தை எதிர்த்து பெண்களும் இளைஞர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பெண்கள் தங்கள் தலைமுடியைக் கத்தரித்தும், ஹிஜாப் துணியை எரித்தும் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினா.

இந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்காக காவல்துறையினர் அடக்குமுறையைக் கையாண்டனா் எனக் குற்றம் சாட்டப் படுகிறது. இந்தச் சம்பவங்களில் 60 சிறுவர்கள் உள்பட சுமார் 500 போ உயிரிழந்தனர்.

இந்தச் சூழலில், போராட்டத்தின்போது வன்முறையில் ஈடுபட்டனர் என ஏராளமானவாகளுக்குத் தூக்கித் தண்டனை விதிக்கப்பட்டது. இரகசியமாக நடைபெற்ற ஒரு தலைபட்ச விசாரணையில் இந்தத் தீர்ப்புகள் வழங்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த தூக்குத் தண்டனைகளை விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் போராட்டக்காராகளுக்கு அச்சத்தை விதைத்து, போராட்டம் மீண்டும் தலையெடுப்பதை முற்றிலுமாகத் தடுக்க ஈரான் அரசு முயலும் என்று மனித உரிமை ஆர்வலாகள் எச்சரித்தனர்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் தீர்ப்பு வழங்கப்பட்ட சில வாரங்களிலேயே இரு போராட்டக்காராகளுக்கு கடந்த ஆண்டு இறுதியில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவாகளில் ஒருவா பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டார்.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள சுமாா 22,000 பேருக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க – தென்கொரிய போர்ப் பயிற்சி தொடக்கம்

## வடகொரியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி



*வட கொரியாவின் கடுமையான எதிர்ப்பையும் மீறி, பல ஆண்டுகளில் அல்லாத அளவுக்கு மிக பிரம்மாண்டமான கூட்டு போா ஒத்திகையை அமெரிக்காவும், தென் கொரியாவும் திங்கள்கிழமை தொடங்கின.*

*சோவியத் ஒன்றியம், சீனாவின் உதவியுடன் வட கொரியாவும், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளின் ஆதரவுடன் தென் கொரியாவும் 1950ஆம் ஆண்டில் போரில் ஈடுபட்டன. பின்னர் இரு நாடுகளும் 'தாக்குதல்களைக் நடவடிக்கைகளை கைவிடுவதற்கான' ஒப்பந்தத்தை 1953ஆம் ஆண்டில் மேற்கொண்டதையடுத்து அந்தப் போா முடிவுக்கு வந்தது. எனினும், அதிகாரபூர்வமான போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரு நாடுகளும் இதுவரை மேற்கொள்ளவில்லை.*

*இந்தச் சூழலில், அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து அவ்வப்போது கூட்டுப் படைப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இது, தங்களது நாட்டின் மீது போா தொடுப்பதற்கான ஒத்திகை என்று வட கொரியா கருதுகிறது. அத்தகைய பயிற்சிகள் நடந்தாலோ, அவை குறித்த அறிவிப்புகள் வெளியானாலோ, தங்களைத் தாக்கினால் அமெரிக்கவுக்கும், தென் கொரியாவுக்கும் பதிலடி கொடுக்கும் வலிமை தங்களுக்கு உள்ளது என்பதை பறைசாற்றுவதற்காக வட கொரியா பல்வேறு தொலைவு ஏவுகணைகளை ஏவி சோதித்து வருகிறது.*

*இந்தச் சூழலில், அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து மிகப் பிரம்மாண்டமான போா ஒத்திகையை 11 நாள்களுக்கு நடத்தவிருப்பதாக அண்மையில் அறிவித்தன. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தங்களது நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவக்கூடிய ஏவுகணையை வட கொரியா ஞாயிற்றுக்கிழமை சோதித்தது. இந்தப் பரபரப்பான சூழலில், திட்டமிட்டபடி அமெரிக்க-தென் கொரிய கூட்டு போர் ஒத்திகை திங்கள்கிழமை தொடங்கியது.*

# சீனாவிற்குள் நுழைய மீண்டும் வெளிநாட்டினருக்கு அனுமதி



கொரோனா பரவல் காரணமாக வெளிநாட்டினர் சீனாவிற்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.


இதனையடுத்து வெளிநாட்டினருக்கான விசா விநியோகத்தை மீண் டும் தொடங்க சீனா முடிவெடுத்துள்ளது.

புதிய பயண ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு அங்கீ கரிக்கப்படுவதோடு, மார்ச் 28, 2020க்கு முன் வழங்கப்பட்ட விசாக்கள், இன்னும் செல்லுபடியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விசாக்கள் மீண்டும் சீனாவுக்குள் நுழைய அனுமதிக்கும் என்று தூதரக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஙாங்காய்க்கு கப்பல்களில் வருபவர்களுக்கும், ஹாங்காங், மக்காவ் மற்றும் ஆசிய பிராந்தியக் குழுவில் உள்ள நாடுகளிலிருந்து வருவோருக்கும் விசா இல்லாத பயணத்தை மீண்டும் தொடங்க அனுமதிக்கும் என்று இந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பப்புவா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



கிழக்கு பப்புவா நியூ கினியாவில் செவ்வாய்க் கிழமை 6.2 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் போர்ட் மோர்ஸ்பிக்கு வட – வடமேற்கில் 448 கிமீ (278 மைல்) தொலைவில் மற்றும் 200 கிமீ ஆழத்தில் ஏற்பட்டது என்று ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# டீசன்ட் பிட்ச் கிடைத்தால் சதமடிப்பேன் என நம்பினேன்

## விராட் கோலி தெரிவிப்பு



2019 பங்களாதேஷ் அணிக்கு எதிராகக சதம் எடுத்ததோடு டெஸ்ட் சதத்திற்கு முழுக்கு போட்ட விராட் கோலி அகமதாபாத் டெஸ்ட்டின் சமதளப் பிட்ச் கைக் கொடுக்க 364 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 186 ஓட்டங்களை எடுத்து சத வறட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார். இதனையடுத்து அகமதாபாத் டெஸ்ட் போட்டியின் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார் விராட் கோலி.

உண்மையில் 10 மணிநேரங்களுக்கும் மேல் கடுமையான வெயிலில் போராடி நின்று மாரத்தான் இன்னிங்ஸ் ஆடி 180 ஓட்டங்களை குவித்த உஸ்மான் கவாஜாவுக்குத்தான் ஆட்ட நாயகன் விருதைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் விராட் கோலி வென்றுவிட்டார்.

இந்நிலையில் அகமதாபாத் டெஸ்ட் ஆட்டம் சமநிலை ஆனதையடுத்து விராட் கோலி ஆட்ட நாயகன் விருதை வென்ற பிறகு ஸ்டார் தொலைக்காட்சிக்குத் தெரிவித்ததாவது:

ஒரு வீரனாக என் மீதே நான் வைத்திருக்கும் எதிர்பார்ப்புகள் எனக்கு முக்கியம்.

கடந்த 10 ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடுவது குறித்த என் ஆட்டத்திற்கான ஒரு வழிமுறை மற் றும் உத்வேகம் கடந்த சில ஆண்டுகளாக என் ஆட்டத்தில் இல்லை. எனவே அதை மீண்டும் கொண்டு வர முயற்சித்தேன்.

நாக்பூரில் நடந்த முதல் இன்னிங்ஸில் இருந்தே நான் நன்றாகத் துடுப்பெடுத்தாடுவதாக உணர்ந்தேன்.

ஆனால் அணிக்காக முடிந்த வரை அதி க கவனம் செலுத்தினோம். ஆனால் கடந்த காலத்தில் நான் செய்ததைப் போல் செய்ய முடியாமல் போனது.

இதனால் கொஞ்சம் எனக்கு ஏமாற்ற மாகவே இருந்தது. ஆனாலும் நன்றாக துடுப்பாட்டம் செய்கின்றேன், ஒரு 'டீசன்டான பிட்ச்' அமைந்தால் நிச்சயம் பெரிய சதம் அடிப்பேன் என்று நம்பிக்கை எனக்கு இருந்தது என்றார் விராட் கோலி.

## தொடர்கிறது பெங்களூரு தோல்வி



நடப்பு மகளிர் ப்ரீமியர் லீக் சீசனில் தொடர்ச்சியாக 5 போட்டிகளில் தோல்வியை தழுவியுள்ளது ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி.

இந்த சீசனின் 11ஆவது ஆட்டத்தில் டெல்லி கேபிடல்ஸ் மற்றும் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் விளையாடின. இந்தப் ஆட்டத்தில் கடைசி ஓவரில் வெற்றி பெற்றது டெல்லி.

நாணயச் சுழற்சியில் டெல்லி அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பாட்டம் செய்த பெங்க–ளூரு அணி 20 ஓவர்களில் 4 இலக்குகள் இழப்பிற்கு 150 ஓட்டங்கள் எடுத்தது. எல்லிஸ் பெர்ரி, 52 பந்துகளில் 67 ஓட்டங்கள் எடுத்தார்.

4 பவுண்டரி மற்றும் 5 சிக்ஸர்கள் அவரது இன்னிங்ஸில் அடங்கும். ரிச்சா கோஷ், 16 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

151 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டெல்லி கேபிடல்ஸ் அணி விரட்டியது. மெக் லேனிங் மற்றும் பாலி வர்மாவின் தொடக்கம் சிறப்பானதாக அமையவில்லை. இருந்தும் அதன் பிறகு களமிறங்கிய ஆலிஸ் கேப்ஸி, ஜெமிமா ரோட்ரிக்ஸ், மரிசான் கேப், ஜெஸ் ஜோனாசென் ஆகியோர் பொறுப்புடன் ஆடினர். அந்த அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

அந்த ஓவரின் முதல் நான்கு பந்துகளில் 12 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. வெறும் 15 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்திருந்தார் ஜேஸ். அவர் ஆட்டநாயகன் விருதையும் வென்றிருந்தார்.

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் இந்த சீசனில் பெங்க–ளூரு அணி இதுவரை ஐந்து போட்டிகளில் விளையாடி உள்ளது. இந்த ஐந்து போட்டிகளிலும் அந்த அணி தோல்வியைத் தழுவி உள்ளது.

டெல்லி (இரண்டு முறை), மும்பை, குஜராத், யூபி வோரியர்ஸ் அணிகளுடன் தோல்வியைத் தழுவி உள்ளது. சிறப்பான அணி அமைந்தும் ஏனோ அந்த அணியால் வெற்றி பெறமுடியவில்லை என ரசிகர்கள் சமூக வலைதள பதிவுகளில் சொல்லி வருவதை பார்க்க முடிகிறது.



## ஒருநாள் ஆஸி. அணிக்கும் ஸ்டீவ் ஸ்மித்தே தலைவர்

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக ஸ்டீவ் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-1 என வென்றுள்ளது. இதையடுத்து மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் மார்ச் 17 முதல் தொடங்குகிறது. மார்ச் 22 சென்னையில் கடைசி ஒருநாள் ஆட்டம் நடைபெறுகிறது.

ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணித் தலைவராக பேட் கம்மின்ஸ் அறிவிக்கப்பட்டிருந்தார். பிறகு அவருடைய தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் கடைசி இரு டெஸ்டுகளில் விளையாடாமல் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பினார் கம்மின்ஸ்.

கடந்த வாரம் கம்மின்ஸின் தாய் மரியா காலமானார். இதையடுத்து ஒருநாள் தொடரில் இருந்தும் கம்மின்ஸ் விலகியுள்ளார்.

தற்போது, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக ஸ்டீவ் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார். கடைசி இரு டெஸ்டுகளிலும் சிறப்பாகத் தலைமை தாங்கி அணியை வழிநடத்தினார் ஸ்மித். அதனால் இந்தப் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு ஆஸ்திரேலிய அணிக்காக 51 ஒருநாள் ஆட்டங்களில் அணித் தலைவராகப் பணியாற்றியுள்ளார் ஸ்டீவ் ஸ்மித். ஆஸ்திரேலிய அணி கடைசியாக விளையாடிய 4 ஒருநாள் ஆட்டங்களில் ஆரோன் ஃபிஞ்ச், கம்மின்ஸ், ஹேசில்வுட் என 3 தலைவர்கள் பணியாற்றியுள்ளார்கள்.



## சத மழை

டெஸ்ட் கிரிக்கெட்டில் கடந்த 5 நாள்களில் சத மழை பொழிந்துள்ளனர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர்கள். இந்தியா - ஆஸ்திரேலியா, இலங்கை - நியூஸிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா - மேற்கிந் திய தீவுகள் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டங்களில் இந்தச் சதங்கள் பதிவு செய்யப்பட்டன.

பெரும்பாலான அணிகளை சேர்ந்த வீரர்களால் அதிகளவிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட முடியவில்லை என வெளிப்படையாகவே கருத்துச் சொல்லத் தொடங்கி உள்ள இந்நிலையில், கிரிக்கெட்டின் அசல் வடிவமான டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தச் சிறப்பான சதங்கள் பதிவு செய்–யப்பட்டுள்ளன.

இந்தியா எதிர் ஆஸ்திரேலியா, அதமதாபாத் டெஸ்டில் உஸ்மான் கவாஜா - 180, கேமரூன் கிரீன் - 114, சுப்மன் கில் - 128, விராட் கோலி - 186 ஓட்டங்கள் குவித்தனர்.

நியூஸிலாந்து எதிர் இலங்கை, கிறைஸ்ட் சர்ச் டெஸ்ட் ஆட்டத்தில் டேரில் மிட்செல் - 102, ஏஞ்சலோ மேத்யூஸ் - 115, கேன் வில்லியம்சன் - 121 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களைக் குவித்தனர்.

தென்னாப்பிரிக்க எதிர் மேற்கிந்தியத் தீவுகள், ஜோகன்னஸ்பர்க் ஆட்டத்தில் டெம்பா பவுமா - 172 ஓட்டங்கள் குவித்தார்.

## இந்தூர் 'பிட்ச்' சர்ச்சை இந்தியா மேன்முறையீடு

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 3ஆவது டெஸ்ட் ஆட்டம் நடந்த இந்தூர் மைதான ஆடுகளம் மோசம் எனத் தீர்ப்பு எழுதிய ஐசிசி நடுவர் கிறிஸ் பிராட், இந்தூர் விளையாட்டுத் திடலுக்கு மூன்று அபராதப் புள்ளிகளையும் வழங்கினார்.

துடுப்புக்கும் பந்துக்கும் சமமான போட்டி ஏற்படவில்லை. ஆடுகளம், தொடக்கம் முதல் சுழற் பந்துவீச்சுக்குச் சாதகமாக இருந்தது என பிராட் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். 5 வருட காலக்கட்டத்தில் எந்த ஒரு விளையாட்டுத் திடல், ஐந்து அபராதப் புள்ளிகளைப் பெறுகிறதோ அதனால் ஒரு வருடத்துக்கு எந்தவொரு பன்னாட்டு ஆட்டத்தையும் நடத்த முடியாது என்பது ஐசிசி விதி.

3ஆவது டெஸ்ட் முதலில் தரம்சாலா மைதானத்தில்தான் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அங்குச் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதால் இந்தூருக்கு 3ஆவது டெஸ்டை நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதற்கு முன்பு, இந்தியாவில் நடைபெற்ற டெஸ்டுகளில் 2017இல் புனே டெஸ்ட் ஆடுகளம் ஐசிசியால் மோசம் என மதிப்பிடப்பட்டது. அந்த டெஸ்டையும் ஆஸ்திரேலியாதான் வென்றது. அப்போதும் கிறிஸ் பிராட் தான் போட்டி நடுவராக இருந்தார். தற்போதைய டெஸ்ட் தொடரில் முதல் இரு டெஸ்டுகள் நடைபெற்ற ஆடுகளங்களுக்கு சராசரி என மதிப்பிட்டுள்ளார் போட்டி நடுவர் ஆண்டி பைகிராஃப்ட்.

இந்நிலையில் இந்தூர் டெஸ்ட் ஆடுகளத்துக்கு ஐசிசி வழங்கிய அபராதப் புள்ளிகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளது இந்தியக் கிரிக்கெட் சபை. இதையடுத்து ஐசிசியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் இந்த விவகாரம் குறித்து அலசி ஆராய்ந்து தங்களுடைய முடிவை அடுத்த 14 நாள்களுக்குள் தெரிவிப்பார்கள். பொதுவாக சராசரிக்கும் கீழ், மோசம், தகுதியற்றது ஆகிய மதிப்பீடுகளைப் பெறும் விளையாட்டுத் திடலுக்குத்தான் அபராதப் புள்ளிகள் விதிக்கப்படும்.

சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டை ராவல்பிண்டியில் நடத்தியது பாகிஸ்தான். இதன் ஆடுகளத்துக்குச் சராசரிக்கும் கீழ் என மதிப்பீடு வழங்கினார் போட்டி நடுவர் பைகிராஃப்ட். இந்த முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

## ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளை 40 ஓவர்களாக குறைக்கவேண்டும்

### ரவிசாஸ்திரி கருத்து



*கிரிக்கெட்டில் ஒரு நாள் போட்டிகள் சுவாரஸியம் குறைந்து வரும் நிலையில் அதனை 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக மறுசீரமைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்தியாவின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.*

*இந்தியாவில் ஒக்டோபர் மாதம் நடைபெறும் 2023 உலகக் கோப்பைப் போட்டி முதல் ஒருநாள் போட்டிகளை 40 ஓவர்களாகக் குறைக்கலாம் என்பது ரவி சாஸ்திரியின் ஆலோசனை.*

*இது பற்றி சமீபத்திய பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:*

*இந்த நவீன கிரிக்கெட்டில் ஒருநாள் போட்டிகள் தொடர்ந்து நீடித்து நிலைப்பதற்கு அதை வருங்காலத்தில் 40 ஓவர்களாக குறைக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நாங்கள் உலக கோப்பையை வென்ற 1983இல் அது 60 ஓவர் போட்டிகளாக இருந்தது. அந்த சமயத்தில் அது ரசிகர்களிடையே சுவாரசியம் குறைய தொடங்கியதால் 50 ஓவர்களாக குறைக்கப்பட்டது.*

*அந்த வகையில் தற்போது ஒருநாள் போட்டிகளை 40 ஓவர்களாகக் குறைக்க வேண்டிய நேரம் வந்து விட்டதாகவே கருதுகிறேன். காலத்திற்கேற்ப இந்த கிரிக்கெட்டின் வடிவத்தை குறைக்க வேண்டியுள்ளது. அதே சமயம் ரி20 போட்டிகள் கிரிக்கெட்டின் சாவியாகும். அது அனைத்துக்கும் தேவையான பணத்தை கொடுக்கிறது. அதை பிரபலப்படுத்த உலகம் முழுவதும் ரி20 தொடர்கள் நடைபெறுகின்றன. அதை நாம் தொடர்ந்து அனுமதித்து நேரடியாக உலக கோப்பையை நடத்த வேண்டும். வேண்டுமானால் உலக கோப்பைக்கு முன்பாக சில ஒருநாள் இருதரப்பு தொடர்களை நடத்தலாம்.*

*மேலும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நிகரானது எதுவும் கிடையாது. அது மிகவும் முக்கியமானது. இந்திய துணை கண்டத்தில் இந்த 3 வகையான கிரிக்கெட்டையும் விளையாடுவதற்கு இடம் உள்ளது - என்று கூறினார்.*

*இதே கருத்து பற்றி தினேஷ் கார்த்திக் பேசியததாவது:*

*ஒருநாள் போட்டிகள் அழகை இழந்து வருகின்றன. இங்கே அனைவரும் டெஸ்ட் கிரிக்கெட்டை தரத்துக்காகவும் ரி20 கிரிக்கெட்டை பொழுதுபோக்குக்காகவும் பார்க்கிறார்கள்.*

*அதனால் ஒருநாள் போட்டிகள் பின்னடைவை சந்திக்கிறது. மேலும் பென் ஸ்டோக்ஸ் அதற்கு முழுக்கு போட்டு விட்டார். எனவே 2 வருடத்திற்கு ஒருமுறை ரி20 உலக கோப்பை நடைபெறுவதால் ஒருநாள் இருதரப்பு தொடர்கள் தேவையற்றன. அதனாலயே நிறைய நாடுகள் அதை குறைத்துக் கொண்டு வருகின்றன -என்று கூறினார்.*

## இந்தூர் ஆடுகளத்துக்கு ஐசிசி நடுவர் அளித்த அபராதப் புள்ளிகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளது பிசிசிஐ-

இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்டை 9 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய அணி வென்றது. 3வது நாளில் ஆஸ்திரேலிய அணி, 18.5 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 78 ரன்கள் எடுத்து அபார வெற்றியை அடைந்தது. ஹெட் 49, லபுனே 28 ரன்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். இந்த டெஸ்டில் மொத்தமாக 11 விக்கெட்டுகள் எடுத்த லயன், ஆட்ட நாயகனாகத் தேர்வானார். 3வது டெஸ்டை வென்றதன் மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு ஆஸ்திரேலிய அணி தகுதி பெற்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2023 இல் வெளியிடப்பெற்றது.